




# ஞானச்சுடர்

## ஆனி மலர் 2003




வெளியீடு

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**




உ

# குறள் வழி

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு"

பொருள்:-

நீதியையும் அறத்தையும் விரும்புத
லால் பிறர்க்கும் தமக்கும் பயன்படு
தலுடையவரது குணத்தை உலகத்
தார் கொண்டாடுவர். (994)



உ

## நற்சிந்தனை

## நல்லூர்ச் செல்வன்

ஒருபொல்லாப்பு மில்லையென்று சொல்வான் - செல்வன்
உல்லாச மாகவே நல்லூரிற் செல்வான் 1

குருசீடம் முறையொன்றுங் கொள்ளான - செல்வன்
குணாதீத னொருவரையுங் கும்பிட்டு நில்லான் 2

அருவென்றும் உருவென்றும் சொல்லான் - செல்வன்
ஆரறி வாரென் றதட்டியே வெல்வான் 3

வருவாரைப் போவாரைத் தெருவில் - செல்வன்
வைவான் சிரிப்பான் மகிழ்ச்சி தருவான் 4

மருமத்தில் மருமமா யிருப்பான் - செல்வன்
மாதவ ருமறி யாதம கத்தான் 5

# ஞானச்சுடர்



வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை.

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு—2 சுடர் 66

## 2003 ஆனி

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அயில் வேலன் கவிபாடு மனமே | 1 - 3 |
| தாயும் ஆனார் | 4 - 5 |
| அருணகிரிநாதர் உணர்த்தும் .... | 6 - 9 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதிக்கந்தன்... | 10 - 11 |
| சக்தி வழிபாட்டிற் பாரதியார் | 12 - 15 |
| பிள்ளைபாதி புராணம் பாதி | 16 - 18 |
| நூற்றாண்டு விழாவில்..... | 19 - 22 |
| நித்திய அன்னப்பணி..... | 23 - 25 |
| ஆத்திசூடி | 26 - 27 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும்... .. | 28 - 31 |
| வருடாந்த வைகாசிப் பெருவிழா | 32 - 34 |
| சந்நிதியான் | 35 - 39 |
| சந்நிதியான் ஆச்சிரம | - 40 |
| திருவருட்பயனின் வசனரூபம் | 41 - 42 |
| அரைநிமிடநேரம் | 43 - 44 |
| மயில்வாகனம் சுவாமிகளின்..... | 45 - 46 |



அன்பளிப்பு:- மலர் ஒன்று 30/ ரூபா

வருடச்சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு: அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு

உ

"ஞானச்சுடர்"

# வைகாசி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

வைகாசிமாத மலருக்கான வெளியீட்டுரையை யாழ்வட்டுக் கோட்டைக்கல்லூரி ஆசிரியர் திரு. து. கணேசமூர்த்தி அவர்கள் மேற் கொண்டார்கள். ஆச்சிரமம் பேரவை என்பன சமயத்திற்காகவும் சமூகத்திற்காகவும் மேற்கொண்டு வரும் பல நல்ல பணிகளை தனது ஆரம்ப உரையில் அடியார்களுக்கு எடுத்துக்காட்டினார்கள். சமயம் என்பது சமயத்திற்காக மட்டுமன்றி வாழ்க்கைக்காகவும் கடைப் பிடிக்கப்படவேண்டும் என்பதை நாம் உணரவேண்டுமென்றும் ஞானச் சுடர் அவ்வாறான கருத்துக்களைத் தாங்கிவருவதையும் வெளிப் படுத்தினார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

செஞ்சொற்செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள் மதிப் பீட்டுரையை வழங்கினார்கள். மிகவும் நுணுக்கமாக ஆச்சிரமம் தொடர்பான செயற்பாடுகளை அவதானித்துவருபவரான செல்வவடி வேல் அவர்கள் இங்கே நடைபெறும் பணிகள் மிகவும் தூய்மையான இறைதொண்டினடிப்படையில் நடைபெறும் பணிகள் என்பதையும் அதனால் தான் இத்தகைய பணிகள் எல்லாம் குறைவின்றி நடை பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்கள்.

ஞானச்சுடரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றின தும் சமயக்கருத்துக்களை எடுத்துக்காட்டி அவற்றின் சிறப்புக்களை வெளிப்படுத்திய அதே நேரம் யதார்த்த உலகில் எமது சமயமக்கள் வாழ்ந்து வரும் நிலமைகளை விமர்சன ரீதியில் எடுத்துக்காட்டினார் கள். அவர் வெளியிட்ட கருத்துக்கள் அனைவரையும் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டுகின்ற கருத்துக்களாக அமைந்திருந்தன.

உலக இந்து சமய மாநாடு தொடர்பான தனிக்கட்டுரையும் மற்றும் சுடர்தரும் தகவல் என்ற தலைப்பிலும் இந்துமாநாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஞானச்சுடர் வெளிவந்திருப்பது ஞானச் சுடருக்கு மேலும் சிறப்பை வழங்குவதாக அமைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

உ

# அவனி இனிதாகுமே

மாறிவரும் உலகினில் மனதுக் குகந்தபதி
முருகனின் சந்நிதிதான்!
மறையுமே மரணபயம் மடியுமே கடுந்துயர்
மனதினில் நினை முருகனை!
ஆறிடும் புண்போல அல்லலற்றுப்போகும்
அயில்வேலை அங்கு பார்த்தால்
அவனி இனிதாகுமே கவனித்து வணங்கிடு
அற்புதத் தெய்வம் முருகன்!

பேறிதனை ஒரு போதும் வாழ்வினில் மறவாதே
போற்றித் துதித்தால் போதும்!
பெரிதெனச் சுமையாகும் எந்தவிடய மெனினும்
பயமின்றிச் செய்ய முடியும்!
ஊறியதன் பேரினால் உள்ளதைச் சொல்கின்றேன்
உலகமே. சந்நிதியை வணங்கும்!
உனக்குள்ளே'' நான் '' என்னும் மமதையை நீக்கிவிடு
உனக்குள்ளும் முருகன் கதைப்பான்!

கே. எஸ். சிவஞானராஜா

★ ★ ★

உ

# சுடர் தரும் தகவல்

எமது சமயத்தவர்கள் கோவில்களைக் கட்டுகிறார்கள் அல்லது புனருத்தாரணம் செய்கின்றார்கள், மணி அடித்து நித்திய பூசைகள் செய்கின்றார்கள், திருவிழாக்கள் நடாத்துகின்றார்கள், இறுதியில் பிரச்சனைப்பட்டு கோட்டிலே போய் நிற்பார்கள். இவ்விதமான குற்றச்சாட்டுகள் மாற்று மதத்தவர்களால் மட்டுமன்றி எமது சமயத்தில் உள்ள பல படித்த அன்பர்களாலும் கூறப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களுமாகும்.

இவை எமது சமயம் தொடர்பாகக் கூறப்படும் இழி நிலை பற்றிய கருத்துக்களாக இருந்தாலும் இவைபற்றி சிந்தித்து திருந்த வேண்டிய விடயங்களுமாகும் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அதே நேரம் எமது சமயம் இன்றைய நிலையில் எவற்றை எல்லாம் செய்யவேண்டும் என்பதையும் பலர் குறிப்பிட்டு வருவதையும் நாம் கவனத்தில் எடுக்கத்தான் வேண்டும். யாழ்மாவட்ட உயர் நீதிமன்ற நீதியரசர் சி. வி. விக்கினேஸ்வரன் அவர்கள் எமது சமய ஸ்தாபனங்கள் சமயப்பணிகளுடன் மட்டும் நின்றுவிடாது சமூக,கல்வி, பொருளாதாரம் தொடர்பான சேவைகளையும் செய்ய வேண்டியது அவசியமானது என்று இந்து இளைஞர் தொடர்பான நிகழ்வு ஒன்றில் விருந்தினராகப் பங்குபற்றிய பொழுது அண்மையில் கூறியகருத்துக்களையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இத்தகைய கருத்துக்களை நாம் முக்கியத்துவம் கொடுக்காது ஒதுக்கிவிடுவது ஆரோக்கியமானதல்ல இக்கருத்துக்கள் சிந்தித்து செயற்பட வேண்டிய கருத்துக்களாகும். அதுமட்டுமல்ல சுவாமி விவேகானந்தரும் இத்தகைய கருத்துக்களையே அடிப்படையாகக் கொண்டு இந்துக்களை வழிகாட்டியதையும் நாம் மறந்து விடலாகாது

ஆனால் கூறப்படும் குற்றச்சாட்டுக்களுக்குமாறாக அமைதியாகவும், அடக்கமாகவும் சமய, சமூக, பொருளாதார சேவைகளை மேற்கொண்டு வருகின்ற சைவசமய அமைப்புக்களையும் நாம் மறந்து விடலாகாது. இவ்விதமான அமைப்புக்கள் இலைமறை காயாக செயற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன ஆனால் இவ்விதமான அமைப்புக்களின் எண்ணிக்கையும், அவற்றின் செயற்திறனும் மேலும் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

## ஆனி மாத சிறப்புப்பிரதி பெறுவோர்

திரு ஐ. கோ. சந்திரசேகரம்
( மார்ஷல் யா / பல்கலைக்கழகம் )

திரு ஸ்ரீ. கணேஸ்வரன்
( சச்சி மோட்டோர்ஸ் வேக்ஸ், திருநெல்வேலி )

திரு நா. சுந்தரம்
( இளை பிராந்திய நிர்வாக அலுவலர் அஞ்சல் திணைக்களம். யாழ் )

Dr V. பாலகிருஷ்ணன்
( முகுந்தன் வைத்தியசாலை, அச்சுவேலி )

திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை
( இளை. ஆசிரியை, பத்தமேனி அச்சுவேலி )

திரு த. முத்துச்சாமி J. P.
( வல்வெட்டி. வல்வெட்டித்துறை )

திரு மா. நாகலிங்கம்
( லக்ஷிமி வெதுப்பகம், பத்தமேனி அச்சுவேலி )

செல்வி இ. வல்லிபுரம்
( ஆசிரியை யாழ் / புனித திரேஷாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி )

திரு வ. த. இன்பராசா
( வல்வெட்டி, வல்வெட்டித்துறை )

திரு க. கிருபாகரன்
( சந்தை வீதி, உடுப்பிட்டி )

திரு க. அரியரெட்ணம்
( கதிர்ஸ் தொலைத் தொடர்பு நிலையம், வல்வெட்டி )

கனம் அதிபர்
( அ. த. க. பாடசாலை கம்பர்மலை )

திரு கு. இரவீந்திரன்
( ஆசிரியர் வீ. ம. வி. தொண்டைமானாறு )

திரு பி. சாந்தரூபன் G. S.
( ஷாருகாந் தொலைத் தொடர்பகம், கெருடாவில் தெற்கு )

உரிமையாளர்
( நாதன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் நெல்லியடி )

திரு சி. தங்கவேல்
( நிறுவனர், கேம்பிறிச் கல்வி நிறுவனம், நவிண்டில் )

திரு சி. பஞ்சலிங்கம்
( ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் )

திரு N. சங்கரலிங்கம்
( நிர்வாகி, சயன்ஸ் அக்கடமி )

திரு க, சிவகுமார்
( மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் )

திருமதி இ. லோகநாதன்
( இளை. பொது முகாமையாளர், மானிப்பாய். )

திருமதி கோமதி குகதாஸன் ஆசிரியர்
( யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி. )

திரு சி. துணிகாசலம்
( இளைப்பாறிய கூ. ச. ஊழியர் பத்தமேனி. )

திரு வே. சம்பந்தநாதன்
( கிராம அலுவலர், புன்னாலைக்கட்டுவன் தெற்கு சுன்னாகம்)

திரு இ. ஜெயக்குமார்
( ஆஸ்பத்திரி வீதி, சங்கானை)

உரிமையாளர்
( மூர்த்தி கட்டுமாணப் பணியாளர் கோண்டாவில் கிழக்கு. )

உ

# 'அயில் வேலன் கவிபாடு மனமே'

செல்வி வி. வாசுகி (*B. A.*)



**ஆ**மது காலத்தில் வாழாத பிற்காலத்தவரையும் நெறிப் படுத்தவே அருணகிரி பாடினான் அவன் பாடல் அத்தனையும் உபதேசப்பாடல்களாகும். முருக னிடம் பக்தி உள்ளவர்களுக்குத் தான் அயில் வேலன் கவி சுவைக் கும் உணர்ச்சி இன்றிப்பாட்டைக் கூறுதல் பாடல் எனப்படும். உணர்ச்சியுடன் பாட வேண்டும் நான் கலந்து பாடல் வேண்டும் அது தான் ஓதுதல் எனப்படும். ''ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப் பது நாதன் நாமம் நமச்சிவா யவே'' அயில் வேலன் கவி பல உண்டு.

"பாவலர்க்கு எளியாய் ஓலம்'' என்பது கந்தபுராணம் ''பாடும் படியே பணியாய் அருள் வாய்'' 'பாடுவார் பசி தீர்ப்பார்' ''சித்தம் அழகியார் பாடாரோ'' 'தமிழோடிசை பாடல் மறந்தறி யேன்'' என்ற சொற்றொடர் களின் வாயிலாகப் பாடல்களின் சிறப்பு வெளிப்படுகின்றது. தமிழ்த்தெய்வம் முருகன். அகத்தி யருக்குத்தமிழ்ஆசானாய் இருந்த வர். அடியார் பலரின் கவிதை களை ஏற்றுக் கருணை புரிந்த வர்.

''குறுமுனிக்கும் தமிழுரைக்கும் குமர முத்தம் தருகவே'' என்றும்
''சிவனை நிகர் பொதிகைவரை முனிவன் அகமகிழ இரு
செவிகளிலும் இனிய தமிழ் பகர்வோனே''
என்றும் அடியவர் பாடியிருக்கின்றார்.

★ அழிவைத் தருவது இரண்டு - பொறாமை, கோபம். ★

" அழித்துப் பிறக்க வொட்டா அயில் வேலன் " உடம்போடு பிறந்தவர் அவ்வுடம்பினுள் இருக்கும் உயிரை என்றோ ஒரு நாள் பிரியத்தான் வேண்டும். அது தான் மரணம். பிறவி வேண்டாம் வேண்டாம் என்றே யாவரும் முருகனை வேண்டுகின்றனர். அவன் அருள் பெற்றவர் மீண்டும் பிறக்க மாட்டார். முருகனின் கையில் உள்ளது அயில் வேல் - கூர்மையான வேல், அது ஞானத்தின் சின்னம், அஞ்ஞானத்தைப் போக்குவது ஞானம், அறிவு வர அறியாமை அகலும், அறியாமை அகலவே பிறப்பு அகலும். அவன் கவியை எழுத்துப் பிழையறக் கற்க வேண்டும்.

வெறும் கல்வியால் அவனை அறிய முடியாது. நூல் அறிவால் வருவது அபர ஞானம். " எத்தனை முறைதான் கற்பினும் கேட்பினும் என் இதயமோ அடங்கவில்லை " என்றார் இராமலிங்கர். கல்வி அனுபவமாக உள்ளுணர்வாக மாற வேண்டும். " உனை எனதுள் அறியும் அறிவைத் தருவாயே " என்றார் அருணகிரி.

அன்பே சிவம், அன்பு வேறு ஆசை வேறு "ஈசனோடாயினும் ஆசை அறுமின்" என்பது திருமந்திரம். வேலன் கவியைப் பாடப்பாட, அன்பு தேடிவரும். உலகில் எத்தனையோ கவிகள் உண்டு. ஆயினும் அன்பை வளர்ப்பது அயில் வேலன் கவியேயாம். தமிழரிடையே பாட்டுக்குப் பெரு மதிப்புண்டு. தாலாட்டுப் பாட்டு, விளையாட்டுப் பாட்டு, வேடிக்கைப் பாட்டு, காதற்பாட்டு, ஒப்பாரிப்பாட்டு எனப் பலவகையுண்டு. மீண்டும் பிறவாத அமைதி பெற வேண்டும் என்றால், முருகனுடைய பாடல்களை ஓத வேண்டும். ஒரு சில பக்திப் பாடல்கள் எம்மை எல்லாம் முருகனிடம் கொண்டு போய்ச் சேர்க்கின்றன. " அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்... " என்பது போலக் கண்ணீர் மல்கிக் கதற வைக்கின்றன. அயில் வேலன் கவிகளே இன்று பிரபல்யமாக விளங்குகின்றன.

குழந்தையின் மொழி அழுகை அடுத்து வரும் மழலை இனிமையானது. மழலை மாறப் பேச்சு உண்டாகிறது. மனிதன் பெறும் பெரிய வரம் பேச்சு. பேச்சில்லா ஊமைக் குழந்தை குமரகுருபரன் செந்தூரிலே பேசினான். பாடினான், யாரைப் பாடினான். கந்தனைப் பாடினான். நாவினால் முருகனைப் பாட வேண்டும். வாயே வாழ்த்து கண்டாய் என்றார் நாவரசு. அவன் தந்த வாக்கை அவனுக்காகவே பாட வேண்டும். பேசும் வாய்தான் வாய், சாப்பிடும் வாய் வாயாகாது. யானையை வாயில்லாப் பிராணி என்பதேன் அதற்கு வாயுண்டல்லவா.

★ தானாக வருவது இரண்டு - இளமை, மூப்பு. ★

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்''
என்றார் அப்பர் பெருமான்.

அயில் வேலன் கவியைப் பாடாதவரை மறுபிறப்பில் வாயிலாப் பிராணியாகவே இறைவன் படைப்பான். முருகன் கவியைப் பாடினால் எல்லாக் கடவுளரையும் பாடியதாக முடியும். கந்தன் காலடியை வணங்கினால், கடவுளர் யாவரையும் வணங்குதல் போலாம்.

நமது மனக்கருத்தே கனவிற் றோன்றுகின்றது என்பது உளவியலாளர் கருத்து. பண்ணேறு மொழியடியார் பரவி வாழ்த்தும் உன்பாத மலர் அழகினை இப் பாவி பார்க்கின் கண்ணூறு படுமென்றோ கனவிலேனும் காட்டென்றால் காட்டுகிலாய் என ஒரு அடியவர் உருகிக் கேட்கிறார். கனவிற் காண வேண்டும் என்றால் நனவிலே - இரவிலே - படுக்கையிலே நினைத்தால் அவன் வருவான். இப்படி முருகனைக் கண்டு களித்தவர் எத்தனை பேர். வரலாறு காட்டும், வா வா என்று தினமும் பாடி அழைத்தால் நிச்சயம் வருவான் வள்ளி மணாளன். வழுக்கி வீழினும் முருகா என்பேன். ''நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'' என்றார் நாவரசர்.

உலக வேதனை மூன்று; ஒன்று மரண வேதனை, செத்தவன் திரும்பி வந்து அது பற்றிச் சொல்லாமையால் அதன் கொடுமை தெரியாது. ஊகித்து அறியலாம். மரணபயத்தை நீக்க வேண்டுமாயின் முருகன் பாடல்களைப் பாடி அப்போதைக்கு இப்போதே ஆயத்தம் செய்ய வேண்டும். யமன் வருவான், எப்போதென்று தெரியாது. அந்த வேளையிற் பாடமுடியாது அதிற் பயன் இல்லை எனவே அயில் வேலன் கவிதை பலப்பல வுண்டு அவற்றை அன்புடன் ஓதிவழிபட்டால் கந்த மோட்சம் உறுதியாகும்.

''எத்தனை பாடலையா எங்கள் முத்துக் குமரனுக்கு ..''

✱✱✱ ✱✱✱

★ வைரம் தனது விலையை லட்சம் ரூபாய்கள் என்று சொன்னதை யாராவது கேள்விப்பட்டதுண்டா? பண்புடையவர்கள் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்வதும், புகழ்ந்து கொள்வதுமில்லை.

★ நல்லவனைக் கண்டுபிடி நல்லவனாக நடிக்காதே. ★

உ

# தாயும் ஆனார்

சி. நவரத்தினம்



உலகத்திலே மிகஉயர்வான, மிக உன்னதமான சக்தி அன்பு தான். கிரேக்க அறிஞர் சோக்கிரட்டீஸ் "அன்புதான் உலக மகா சக்தி" எனக் கூறியுள்ளார் ஆம், இந்த அன்புக்கு ஈடு இணை யாக எதனையும் கூறிவிட முடியாது. இந்த அன்பினால் எதனையும் சாதித்து விட முடியும். அன்பிலே சிறந்தது தாயன்பு ஆகும். தாய் சேயிடம் காட்டும் அன்பு, கணவன் மனைவியிடம் வைத்திருக்கும் அன்பு, மிருகங்கள் தம் கன்றுகள் குட்டிகள் மீது வைத்திருக்கும் அன்பு, இவையெல்லாம் அன்பு தான். இவற்றுளெல்லாம் மேலான அன்பு தாயன்பு தான் என்பதை இறைவனே காட்டியுள்ளார்.

"தாயினும் நல்ல தலைவரென்றடியார்" என்றும்
"பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப் பரிந்து" என்றும்
இறைவனது அன்பு பற்றிப் பாடியுள்ளனர்.

இறைவன் இரு சந்தர்ப்பங்களிலே தாயாகி வந்து உதவிய வரலாற்றைச் சிந்திப்போம்.

ஒரு காட்டில் ஒரு தாய்ப் பன்றியும் பன்னிரண்டு குட்டிகளும் வாழ்ந்து வந்தன. குட்டிகள் தாய் மீது ஏறிக்குதித்து விளையாடுவதும், பாலைக்குடிக்கப்போட்டி போடுவதும் வழமையான சம்பவமாகும். ஒரு நாள் திடீரென்று தாய்ப் பன்றிக்கு நோய் வந்து இறந்து விட்டது. குட்டிகள் தாயின் நிலையைக் கண்டு கண்ணீர் சிந்தி அழுதன. பசியால் துடிதுடித்தன இதனைத் தாயிற் சிறந்த தயவான தத்துவனான இறைவன் உணர்ந்தார்.

★ உருகும் உள்ளத்தில் உதிப்பது அன்பு. ★

தாய்ப்பன்றி வேடம் தாங்கிப் பன்றிக்குட்டிகள் முன் சென்றார் குட்டிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்து பால் குடித்துப் பசியைப் போக்கின. தாய் மீது ஏறிக்குதித்து விளையாடின. இவ்வாறு இறைவன் பன்றிக் குட்டிகளுக்குத் தாயாக வந்து அவற்றைப் பராமரித்து வளர்த்தார் என்பது ஒரு வரலாறு.

அடுத்து, திருவானைக்கா என்ற கிராமத்தில் ஒரு மூதாட்டியும் அவளுடைய மகளும் வாழ்ந்து வந்தனர். அம்மூதாட்டி திருச்சிராப்பள்ளி மலைக்குன்றில் இருக்கும் சிவனுக்குத் தினமும் பூமாலை கட்டிச் சார்த்துவது வழக்கம். அவளுடைய மகளோ பெறுமாதக் கர்ப்பிணி, அவர்கள் வசிக்கும் கிராமத்திற்கும் அக்கோவிலுக்கும் இடையில் ஒரு ஆறு பாய்ந்து ஓடுகின்றது. அம்மூதாட்டி அந்த ஆற்றுக்கு மறுபக்கம் சென்று தான் பூப்பறித்து வந்து மாலை கட்டுவாள். அன்றைய தினம் அம்மூதாட்டி அந்த ஆற்றுக்கு மறுபக்கம் பூப்பறிக்கச் சென்று விட்டாள். அவள் பூப்பறித்து விட்டுத் திரும்பி வரும் போது திடீரென்று ஆறு பெருக்கெடுத்து ஓடியது மூதாட்டியால் வீட்டுக்குச் செல்ல முடியவில்லை தன் கர்ப்பிணிப் பெண்ணை நினைத்து மிகவும் வருந்தியவளாய்த்திருச்சிராப்பள்ளி இறைவனிடம் தனது நிலையை எண்ணி முறையிட்டாள். மூதாட்டியின் மகள் பிரசவ வேதனையால் துடிதுடித்துக் கொண்டிருந்தாள். உடனே திருச்சிராப்பள்ளி இறைவன் அம்மூதாட்டியின் வேடம் தாங்கி அவள் வீட்டிற்குச்சென்று அப்பெண்ணின் பிரசவ வேதனையை நீக்கிக் குழந்தையைப் பிறக்கச் செய்தார். பின்னர் அவளுக்கு வேண்டிய மருத்துவ வேலைகளைச் செய்து அவளுடைய துன்பத்தை நீக்கி மறைந்தருளினார்.

ஆற்றுப் பெருக்குக் குறைந்ததும் மூதாட்டி பதைபதைப்புடன் மகளிடம் ஓடி வந்தாள். அங்கே தன் மகளும் குழந்தையும் மகிழ்ச்சியோடு இருப்பதைக் கண்டாள். அந்தப் பிரசவம் எப்படி நிகழ்ந்தது அதற்கு உதவியவர் யார்என்றெல்லாம்மூதாட்டி மகளைக் கேட்டாள். ''நீ தானே அம்மா எல்லா வேலைகளையும் செய்து உதவினாய்'' என்று மகள் கூறினாள். வியப்படைந்த அம்மூதாட்டி இறைவன் தான் தன் வடிவில் அங்கு வந்து தன் மகளுக்கு உதவியுள்ளார் என்று மனம் நெகிழ்ந்து திருச்சிராப்பள்ளி இறைவனது கருணையை நினைந்து ஆனந்தக் கண்ணீர் மல்கினாள்.

★ ★

★ செல்வச்செருக்கு தலை காட்டியே தீரும். ★

உ

# அருணகிரிநாதர்
## உணர்த்தும் தெய்வ உணர்வு கலந்த
# அறஉணர்வு

கு. கனகரத்தினம்



முருகப்பெருமான் அருள் பெற்ற அடியார்களுள் தலையாயவர் அருணகிரிநாதர் முருகப்பெருமான் அருட்காட்சியைப் பெற்றுச் 'சும்மாஇருசொல்லற' எனும் ஞான உபதேசம்பெற்றவர்பெருமான் அருளால் அவர்சீர் பல பாடினார். அவை பொருள் பொதிந்த, அருள் செறிந்த பாடல்களாக, திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல், மயில், சேவல்விருத்தங்களாகஅவர்வாய் வழி வந்த நிறை மொழிகளாக விளங்குகின்றன. அவை பாடிப் பரவுவார் நெஞ்சங்களில் தெய்வ உணர்வையும் தெய்வ உணர்வு கலந்த அறஉணர்வையும் வளர்க்கின்றன. வையத்து வாழ்வாங்கு வாழும் நெறி பலவும் காட்டுகின்றன. பாடல்கள் மூலமாக நாலு நெறிகள் நவில்கின்றார். அவை தடுங்கோள்மனத்தை விடுங்கோள் வெகுளியை, தானமென்றும் இடுங்கோள், இருந்தபடி இருங்கோள் என்றநன்னெறி நாலுமாம். இந்த நாலுநெறிகள் வழியில் வாழ்ந்தால் ''வைவேல் விடுங்கோனருள் வந்து தானே உமக்கு வெளிப்படும்'' என முருகன் அருள்பெறும் வாய்ப்பினையும் சொல்லி ஆற்றுப்படுத்துவது போற்றற்குரியது. பாடலை முழுமையாகப் படிப்போம், பரவுவோம்.

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியை, தானம்என்னும்
இடுங்கோள், இருந்தபடி இருங்கோள், எழு பாருமுய்யக்

★ அனுபவமே ஒருவனது உன்னத ஆசான். ★

கொடுங் கோபச் சூருடன்குன்றந்திறக்கத் தொளைக்க வைவேல்
விடுங்கோன் அருள் வந்து தானே உமக்கு வெளிப்படுமே (க.அ)

இவ்வாறு காட்டும் நெறிகளைக் கொண்டொழுகுவது சுலபமான காரியமா? மனம் பொறி புலன்கள் வழிச்சென்று ஆசையை வளர்த்துக் கொண்டிருக்கும். அல்லது சலித்துக் கொண்டிருக்கும் மனத்துள் விளையும் ஆசை பிறவிக்கு வித்தாக அமைகிறது. வள்ளுவனாரும்

அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாப் பிறப் பீனும் வித்து

என மக்கட் சமூகத்தின் விடுதலை நோக்கி உரைத்திருப்பது நோக்கத்தக்கது. பிறவித்துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆசையாகிய கடலில் இருந்து கரை ஏறவேண்டும். இது கைகூடுவதற்கு மனத்தை அடக்க வேண்டும். மனம் ஒடுங்கும் நெறிகளில் மனத்தைச் செலுத்த வேண்டும். அந்நெறிகளாகிய வழிபாடு, பூசை, தியானம், யோகம் ஆகியவற்றில் மனத்தை வழிப்படுத்தவேண்டும். வழிப்படுத்தும்போது இறை அருளால் மனத்தில் எழுகின்ற ஆசை அழியும். மனவேகம் கெடும். வேகங்கெடுத்தாளும் வேந்தனல்லவா இறைவன் மனவேகம் கெட மனத்திற் சலனமற்ற நிலை தோன்றும் சலன மற்ற நீரில் சூரிய, சந்திர விம்பக்காட்சி தோன்றுவது போல மனத்தில் இறைவனது காட்சிதோன்றும். அருணகிரியார் சொன்னது போல வேலோன் அருள் வந்து தானே வெளிப்படும்.

மனத்தைத் தடுக்கும் ஆற்றல்படைத்த முனிவரையும் வெகுளி விட்டதில்லை துருவாச முனிவருக்கு வந்தகோபம் சகுந்தலையின் வாழ்வைக் கலங்க வைத்தது வெகுளியினால்விசுவாமித்திரர் தவத்தையும் நலத்தையும் இழந்தார். எவ்வகையிலும் வெகுளி கொடியதாதலால் விடுங்கோள் வெகுளியை என உரைத்தார் அருணகிரிவள்ளல் திருவள்ளுவனாரும்

'தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்'

எனக் கோபத்தின் கொடுமையைக் கூறித்தன்னைக் காத்துக்கொள்ள வேண்டி கோபத்தை விடவேண்டும் என

உரைப்பதைப் படிக்கின்றோம் கோபத்தை விடுமாறு சொல்லிய அருணகிரிநாதர் கோபத்தை விடும் வழியையும் சொல்லியிருக்கிறார் பிறிதோரிடத்தில் ''பொறையா மறிவால் அரிவாய் அடியோடு மகந்தையையே'' என அறிவுரை கூறியிருக்கிறார். பொறுமையை ஆயுதமாகக் கொண்டாற் கோபம் அடங்கும் அதனால் மன நலம், உடல்நலம். உயிர் நலம்வளரப் பெறும்.

இதுவரை சொல்லிய மன மடங்கலும் சினமடங்கலும் தன்னலமாகும் தன்னலத்தோடு பிறர் நலமும் பேணப்படவேண்டுமென்பதால் '' தான மென்றும் இடுங்கோள்'' என்றார். அவர் மேலும் பல பாடல்களில் ''வறிஞர்க்கென்றும்இடுங்கள்'' 'நொய்யிற்பிளவள வேனுங்கொடுங்கள்' 'ஏற்பவர்க்கு இடுங்கள்' 'உள்ள போதே கொடுங்கள்'' என நெஞ்சங்களைத் தட்டித் தட்டிச் சொல்வதிலிருந்து அவர் தான மிடுதலை உயர்ந்த தருமமாகக் கருதினார் என்பதைஅறிகிறோம் எனவே, அவர்காட்டிய வழியில் ஒல்லும் வகையிற் செல்வோம் திரு வள்ளுவனார் சொல்லிய

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாய் எல்லாம் செயல்

என்னும் வாய்மொழியைச் சிந்தையிற் கொள்வோம்

இவை எல்லாங் கடந்து 'இருந்தபடிஇருங்கோள்'என ஒரு பெரு நிலையையும் கொண்டு ஒழுகுமாறு சொல்லியிருக்கிறார் இதில் மனத்தைத் தடுத்தும் வெகுளியை விடுத்தும் தானமிட்டும் இருத்தலாகிய தளராத நிலையன்று இறையோடு ஒன்றி இருத்தலாகிய பெரு நிலை மற்றொன்று, ஒன்றி இருத்தல் என்பது இறை சிந்தனையோடிருத்தல் அவர் கூறிய நாலுநெறிகளிலும் ஒழுகப்பெற்றால் எந்தை முருகவேளின் அருள் தேடிவரும் பெருவாழ்வும் பேறும் கிடைக்கும். இது அவர் நமக்குக் காட்டும் அருள்வழி.

மேலும் அறவினை செய்யும் போது அருள்வழி நின்று இறை உணர்வோடு செய்யுங்கள் செய்யும் பயன் இறை அருள்போல எங்காயினும் வந்து உதவும்எனப் பின்வரும் பாடலில் அவர் அருளி இருப்பதைக் காண்போம்.

பொங்கார வேலையில் வேலை விட்டோனருள் போலுதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க் கிட்ட திடாமல் வைத்த
வங்காரமு முங்கள் சிங்கார வீடும் மடந்தை யரும்
சங்காதமோ கெடுவீருயிர் போமத் தனி வழிக்கே. (க.அ)

அடக்கமே அறிவிற்கு வித்து.

இப்பாடலில் இரப்பவர்க்குக் கொடாமல் வைத்திருக்கும் செல்வமும் மற்றும் மதிக்கப் படும் அழகிய வீடும், பெண் களும் உயிர் போகும் வழிக்குத் துணையாகா. எது துணையாகு மெனில் ஏற்பவர்க்கிட்டது அது முருகன் அருள் போல எவ்விடத்திலாயினும் வந்து துணை புரியும் எனப்படிப்பவர் மனத்தில் அருள் நாட்டத்தையும் அற நாட்டத்தையும் அருணை வள்ளல் ஊக்குவிப்பதைப் பார்க்கிறோம். மேலும் ''வறிஞர்க் கொன்று ஈதலோகை'' எனும் வாக்கினுக்கமைவாக

வையிற் கதிர் வடிவே லோனை வாழ்த்த வறிஞர்க் கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள் நுங்கட் கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறு நிழல் போற்
கையிற் பொருளும் உதவாது காணுங் கடைவழிக்கே (க. அ)

என வறிஞர்க்கொன்றீவதையே பெரிதாகக் கூறியிருக்கிறார் இப் பாடலில். தானும் அனுபவிக் காது, ஈதலும் செய்யாதுகையில் வைத்திருக்கும் பொருட்செல்வம் வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின் வெறு நிழல் போல உயிர் போகும் தனி வழிக்குத் துணையாக வரா அதனால் வடி வேலோனைவாழ்த்தி அவன் சிந்தனையுடன் கையிலிருக்கும் பொருளிலே சிறிதளவையாவது வறிஞர்க்குப் பகிர்ந்து கொடுங்கள் அது உங்கள் மரண வழிக்கு உதவும் என ஈயாத நெஞ்சங் களுக்கு அழுத்தி உரைப்பதைப் பார்க்கின்றோம். தானங்களில் வறிஞர் பசிபோக்கும் தானத்தையே பெரிதாகக் கருதினார் அருணகிரியார் என்பது புலனாகின்றது. தெய்வப்புலவரும்

''அற்றார் அழி பசிதீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி''

எனப்பொருளைச்சேமித்து வைக்குமிடம் வறியார் பசிபோக்கும் இடமெனக் காட்டுவதைப் பார்க்கிறோம். அருணகிரியார் பாடலில் வேலோனை வாழ்த்துங்கள், வறிஞர்க்கென்றும் பகிர்மின்கள் என அவர் கூறியிருப்பவை சிந்தனையிற் கொள்ளவேண்டியவையாகும். வேலோனை வாழ்த்துவதால் நான் என்னும் தன் முனைப்பு அழிகின்றது. யாவும் அவன் செயல் என்னும் உணர்வு தோன்றுகிறது அதனால் செய்யும் செயலால் விளையும் ஆகாமியவினை இல்லாதொழிகின்றது

[தொடரும்...

உ [ தொடர்ச்சி...

# ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் திருத்தல புராணம்

## சி. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள்

பரங்கிரி முதலா மாறு படைகளிற் பயின்றாய் போற்றி
உரங்கொழு மசுரர் தங்கள் உடல்பிளந் தவனே போற்றி
இரங்கிய தேவர் தம்மை இரட்சித்த இறைவா போற்றி
வரங்களும் பதமும் கூட்டும் மாமயிற் குமரா போற்றி 145

பன்னிரு தோளா போற்றி பார்வதி பாலா போற்றி
கன்னியர் இருவர் பேணும் கணவனே போற்றி மஞ்ஞை
மன்னவ போற்றி சேவல் மணிக்கொடிக் கதிபா, செல்வச்
சந்நிதிக் கந்தா போற்றி, சண்முகா போற்றி போற்றி. 146

ஐயனே சரணம் சோதி அழகனே சரணம் வண்மைக்
கையனே சரணம் ஞானக் கடம்பனே சரணம் செம்பொன்
மெய்யனே சரணம் நான்கு வேதனே சரணம் அன்பர்
செய்யனே சரணம் கந்தச் செல்வனே சரணம் யாமே 147

### வாழி

அற்புத மாக இந்நூற் கருளிய துரையே வாழி
அயில்வடி வேலா வாழி ஆறிரு கரனே வாழி
கற்புயர் வள்ளி தெய்வ குஞ்சரி கணவா வாழி
கஜமுகன் தம்பி யேநற் காஞ்சிமா வேளே வாழி
சிற்பர நடன மாடும் சித்திர மயிலோய் வாழி
சேவலங் கொடியாய் வாழி சிவகுரு பரனே வாழி
தற்பர மாகிநின்ற சரவண பவனே வாழி
தந்தையே தாயே செல்வச் சந்நிதிக் கந்தா வாழி

குருபரன் வாழி தெய்வக் குஞ்சரி வாழி தேன்மா
தருகுற வள்ளி வாழி சத்திவேல் வாழி தோகைத்
திருமயில் வாழி சேவற் செழுங்கொடி வாழி கந்தன்
மருவடித் தொண்டர் வாழி மாண்புற வையமெல்லாம் 149

### பயன்

என்றுமென் னைய னிணையடி ஏத்தி இசைகதிரை
மன்றினை ஒத்திடு மித்தல மாண்பை மனத்தமைத்துக்
குன்றுடை யாயென நின்றுணர் வார்தம் கவலையொழிந்
தொன்றிடும் செல்வனின் ஒண்மலர்த் தாணயந் துய்குவரே 150

★ மனதை ஒருநிலைப்படுத்துதலே வெற்றிக்கு அடிப்படை. ★

உ

# திருத்தல புராணம்

145) திருப்பரங்கிரி முதலிய ஆறுபடைவீட்டிற் பொலிபவரே வணக்கம் வலிமைமிக்க அசுரரின் ( சூரபத்மாவின் ) உடலை இரு கூறாக்கிச் சேவல் மயிலாகக் கொண்டவரே வணக்கம் சூரனால் துரத்தப்பட்டு அல்லற் பட்ட தேவர்களைச் சிறைமீட்டுப் பழையபடி அவர்கள் அரசுரிமை பெறச் செய்தவரே வணக்கம் அடியார் விரும்பியவரங்களும் பேரின்ப மாகிய திருவடித்தாமரைச் சுகமும் கொடுக்கும் ஓங்காரமயிலில் வரும் ''குமாராயநம '' என்னும் மந்திரத்துக்குரியவரே வணக்கம்

146] பன்னிரண்டு தோள்களையுடையவரே வணக்கம் பார்வதி அணைத்த சரவணபவனே வணக்கம் வள்ளி நாயகியார் தெய்வநாயகியார் வலமும் இடமும் இருக்கும் மணவாளனே வணக்கம் மயிலேறும் மன்னவனே வணக்கம் வேற்கொடியைக் கொண்ட அதிபனே வணக்கம் சந்நிதியில் வீற்றிருக்கும் கந்தா, சண்முகா வணக்கம்

147] எங்கள் தலைவனே அடைக்கலம் சோதியழகுடைய சிவந்த ரூபனே அடைக்கலம், மிகு கொடையுடைய கையுடையவனே அடைக்கலம் கடம்ப மலர் மாலைவிரும்பி அணியும் ஞானமூர்த்தியே அடைக்கலம் பொன் போலும் உடம்பையுடையவரே அடைக்கலம் நான்கு வேதப் பொருளே அடைக்கலம் அன்பர் மனத்தில் செம்மைப்பொருளாக உறைபவரே அடைக் கலம் செல்வச் சந்நிதிக் கந்தனே, யாமெல்லாம் உமக்கு அடைக்கலம்.

அவசரம் அதிகமானால் வேகம் குறையும்.

உ

# சக்தி வழிபாட்டிற் பாரதியார்

மாலினி குணரத்தினம்



அகிலத்தை ஆள்பவள் அமிழ்தினும் இனிய அகிலாண்டேஸ்வரி. அறியாதவற்றையெல்லாம் அறியவைக்கின்ற மிகப் புனிதமான சக்தியும் அவளே வேதங்களிளெல்லாம் சக்திவெவ்வேறு நாமங்களாலே போற்றப் படுகின்றாள். உயிரினும்மேலான சக்தியைப் புரட்சிக் கவிஞர் பாரதியார் தமது பாடல்களிலே மிகவும் பக்திப்பரவசத்தோடும் உரிமையோடும் போற்றுவதுடன் எமக்கும் வழிகாட்டியாக உள்ளார்.

சக்தியின் அருளிருந்தால் நமக்குப்போதும். துன்பங்கள் எம்மை அண்டமாட்டா. அப்படியே துன்பங்கள் வந்தாலும் தீயிலேபட்ட பஞ்சின் நிலையைப் போல மறைந்து விடும். சக்தியின் பார்வையின் முன் துன்பமெனும் பஞ்சானது உருத்தெரியாமற் கருகிப் போய்விடும். அத்துடன் உள்ளத்திலே கள்ளங்கபடமற்றுத் தஞ்சமென அவளை அழைத்தால் நலமே அளிப்பாள் என்பதைப் புரட்சிக் கவிஞர் பின்வருமாறு இயம்புகின்றார்.

''நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர் மணிப்பூண்
பஞ்சுக்கு நேர் பல துன்பங்களாம், இவள்
பார்வைக்கு நேர் பெருந்தீ

★ சூதாட்டக்காரனுக்கு எதுவும் புனிதமில்லை. ★

வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்த ரெல்லீரும்
தஞ்ச மென்றே யுரைப்பீர் அவள்பேர், சக்தி
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்''

ஆதிபராசக்தி தன்னைத் துயரக்கடலினின்றும் விடுவித்து நிம்மதியைத் தந்தாள். அவளைத் தோத்திரம் செய்ததனால் தான் தனக்குத்தொல்லைகள் நீங்கப் பெற்றன என்பதை மக்களுக்கு எடுத்துரைத்து, அவர்களையும் அதில் ஈடுபடுத்துகின்றார் பாரதியார் தான் கடைப்பிடித்த வழியைப் பாடலாக வடிக்கின்றார்.

'' ஐயமுந் திகைப்புந் தொலைந்தன ஆங்கே
அச்சமுந் தொலைந்தது சினமும்
பொய்யுமென் றினைய புன்மைக ளெல்லாம்
போயின வுறுதி நான் கண்டேன்
வையமிங் கனைத்து மாக்கியும் காத்தும்
மாய்த்துமே மகிழ்ந்திடு தாயைத்
துய்யவெண் ணிறத்தாள் தனைக், கரியவளைத்
துணையெனத் தொடர்ந்தது கொண்டே ''

உடல் உறுப்புக்களில் ஒன்றாகிய வாயினைச் சக்திக்கே கருவியாகக் கூறுகின்றார் பாரதியார். இதனால் நாம் பேசும் வார்த்தைகள் யாவுமே சக்திமயமாக இருக்கும் சக்தியின் புகழையே நம்வாய் முழங்கும் அவ்வாறு நடக்கும் போது சக்தியானவள் நமக்குச் சக்திநெறி அனைத்தையும் வழங்குவாள் என்பதை

'' சக்தி தனக்கே கருவியாக்கு - சிவ
சக்தி புகழினை யது முழங்கும் - வாய்
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்தி நெறியா வினையும் வழங்கும்''

என இயம்புகின்றார். இதனையே ஆதிசங்கரரும் ஸௌந்தர்ய லஹறியில் ''நான் பேசும் பேச்சுக்களெல்லாம் நின்மந்த்ர ஜெபமாகட்டும்'' எனச் சக்தியிடம் வேண்டுகின்றார்.

கலைத்தேவியின் மீது ஏற்பட்ட மோகத்தினால் சித்தம் தளர்ந்து போகின்றார் பாரதியார். அவளிடம் வைத்த நினைவைத்தவிர வேறு இல்லாமையாற் சக்தியைத் தேடித்தேடி அலைகின்றார்.

''சித்தந் தளர்ந்த துண்டோ? - கலைத்
தேவியின் மீது விருப்பம் வளர்ந்ததொரு
பித்துப் பிடித்தது போற் - பகற்
பேச்சும் இரவிற் கனவும் அவளிடை
வைத்த நினைவை யல்லாற் - பிற
வாஞ்சை யுண்டோ?''

என வினா எழுப்பி, எண்ணிய காரியங்களை முடிப்பதற்குப் பராசக்தியிடம் அருள் வேண்டிக் கொண்டு, பாரதியார் நமக்கும் வழிகாட்டுகின்றார். நாம் இப்பிறப்பிற் பாவம் செய்திருந்தாலும் அல்லது முற்பிறப்பிற் செய்திருந்தாலும் அவை ஆதவனைக் கண்ட பனிபோல மறைந்து போய் விடவேண்டும் என விண்ணப்பம் செய்கின்றார்.

'' எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதி முன் பனியேபோல
நண்ணிய நின் முனிங்கு
நசித்திடல் வேண்டு மன்னாய்''

பாரதியார் பொது நோக்கம் கொண்டவர் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர் சக்தியிடம் தனக்குவல்லமை தருமாறு வேண்டுகின்றார். அது தனக்காக வல்ல. 'இந்தமாநிலம் பயனுற்று வாழ்வதற்காகவே' என்கிறார். தன்னுடைய அறிவு மக்களுக்குப் பயன்படவேண்டும். நல்லவீணையைச் செய்து புழுதி படிய விடுவது போல் என்னை விட்டு விடாமல் இம்மாநில மக்களுக்காக அருள் புரிவாயாக எனச் சக்தியிடம் இறைஞ்சி நிற்கின்றார் அவர்.

''நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியி லெறிவதுண்டோ?
சொல்லடி; சிவசக்தி - எனைச்
சுடர் மிகு மறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ இந்த

★ மேன்மையை நாடிச்செல்பவனுக்கு சிறுகுறைகள் உறுத்தாது. ★

மாநிலம் பயனுற வாழ்வதற்கே
சொல்லடி, சிவசக்தி -- நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?''

பாரதியாருக்குச் சக்தியின் மேல் எந்தளவிற்கு பற்றுதல் இருந்ததோ அந்தளவு ஈடுபாடு தமிழ்மொழியின் மீதும் இருந்தது. தமிழின் இனிமையான சொற்களைக் கொண்டமையாற் பாரதியின் கவிதைகள் பல்லோராலும் போற்றப்படுகின்றன. சக்தி சக்தி என்று எந்தநேரமும் தமிழ்க் கவிதை பாடிப்பக்தி பரவசத்துடன் அவளைத் தொழும் போது பயம் என்பது சிறிதும் அண்டுவதில்லை என்கிறார் கவிஞர்.

''சக்தியென்று நேரமெல்லாந் தமிழ்க்கவிதை பாடிப்
பக்தியுடன் போற்றி நின்றாற் பயமனைத்தும் தீரும்''

இவ்வாறாகப் பாரதியாரின் வழியொற்றிச் சக்தியினை மனதார வாஞ்சையுடன் வழிபாடு இயற்றி அருள் பெற்று உய்வோமாக.

## வெளித்தோற்றம்

ஒரு மனிதனின் வெளித்தோற்றத்தை மட்டும் கண்டு நல்லவனென்றோ தீயவனென்றோ உறுதி செய்துவிடாதே. பலாப்பழம் முள்ளும்முள்ளாக மேலே தோற்றமளிக்கும். உள்ளுக்குள் சுவையுள்ள சுளைகள் பல உண்டு. வீணைகோணல். ஆனால் இனிய நாதம் உண்டு. எட்டிப்பழம் மேலே பளபளவென்றிருக்கும், தொட்டாலே கசக்கும். நாவற்பழம் கருமை ஆனால் இனிக்கும். பாம்புக்குட்டி பளபளவென்றிருக்கும். கொடிய விடத்தைத் தரும். அம்பு நேராக இருக்கும், உயிரை வாங்கும். வாரியார் பொன்மொழிகள்

எல்லோருக்கும் அறிவுரை வழங்கலாம் ஆனால் துணை போகாதீர்கள்.

உயிரோடிருக்கும் போது எதையும் கொடுக்காமல், இறந்த பிறகு தர்மங்கள் செய்ய ஏற்பாடு செய்வது வடிகட்டிய சுயநலமாகும்.

✶ அருளின் மிக உயர்ந்த வடிவம் மௌனம். ✶

உ

# பிள்ளைபாதி புராணம்பாதி

கலைவதனி கிருஷ்ணகுமார் B. A.

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலிற் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

பிறையணி பிரானை வழி வழி போற்றும் சோழ நாட்டிலே நீர்வளனும் நிலவளனும் தெய்வீகவளனும் நிறைந்த சீகாழிப் பதியில் அந்தணர் குலத்தில் சிவபாதவிருதயரும் பகவதியாரும் செய்த தவப்பயனால் தமிழோடிசைபாடிச் சைவம் வளர்க்க திருவாதிரை நாளில் அவதரித்தவர் ஞானசம்பந்தர். பிறப்பு வேறு அவதாரம் வேறு முருகனே ஞானசம்பந்தனாக அவதரித்தார் என்பர்.

புராணம் என்பது பழைமை சைவசமயக் கருவூலங்களிற்சிறப்பான இடம் பெறுவது புராணம் இப்புராணத்தைச் சைவத்திலிருந்து எடுத்துவிட்டாற் சைவ பக்தி மணம் குறைந்துவிடும். அன்புப் பேடகமாக மிளிர்வது பெரிய புராணம். இது மிகப் பெருமையானது. அடியார் பெருமை கூறுவதாற் பெரியபுராணம் என்பது சாலப் பொருத்தமுடையதே. அயரா அன்பில் அரன்கழல் போற்றித் தத்துவக் குறும்பினின்றும் விடுதலை அடைந்து மெய்யுணர்வுபெற்றுச் சிவபக்தி, அடியார் பக்திமிக்க சேக்கிழார் சுவாமிகளாற்சைவம் வாழப் பாடியருளப்பட்டது இப்புராணம். இதில் 63 தனியடியார்கள் 9 தொகையடியார்கள் வரலாறுகள் 4287 பாடல்களில் இடம் பெற்றாலும், சம்பந்தர் வரலாறு 1256 பாடல்களில் இடம்பெறுவதால் இது பிள்ளை பாதி, புராணம் பாதி என வியந்து பேசப்படுகின்றது

வாழ்வு வளம் பெறச் செல்வம் மட்டும் போதாது. செல்வத்துடன் அறிவு, கனிவு உணர்வு என்பனவும் தேவை. இதுவே வாழ்வு. ''வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே'' என்றார் மணிவாசகர். சமயமே வாழ்வு. வாழ்வுதான் சமயம் சமயவாழ்க்கை இன்றிய

மையாதது. நாயன்மார்கள் வாழ்ந்த போதெல்லாம் தமிழகம் எங்கும் பக்தி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. மூவர் தமிழ் எங்கும் முழங்கியது சிவ நெறி எங்கும் மணம் வீசியது.

பிள்ளையார் தோன்றியபோது சைவம் நலிவுற்றிருந்தது சமண பௌத்தம் தழைத்தன இது கண்டு தரிக்காத சிவபாத விருதயரின் பெருந்தவப் பலனாகவே அவதரித்தவர் ஞானக்குழந்தையார், பதினாறு ஆண்டுகாலம் வாழ்ந்த பிள்ளையின் வரலாறு கூறுதற்குப் புராணத்திற் பாதி இடம் பெற்றது நியாயமானதே மூன்று வயதிலே உமையவர் பாலுண்டு ஞானத்துடன் சம்பந்தம்பெற்று ஞானசம்பந்தர்என்ற சிறப்புப் பெயர் பெற்ற இவரின் பெருமை பேச நா ஆயிரம் போதாது பிஞ்சுக்கரம் சிவக்கத் தாளமிட்டு ''மடையில்வாளை'' என்ற தமிழ்வேதம் பாடிய போது பொற்றாளம் பெற்றார். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மரபில் வந்த மதங்கசூளாமணியார் இறைவன் ஆஞ்ஞைப்படி சிதம்பரத்திலே பிள்ளையின் பாடல்களுக்குப் பண்வகுத்தார். பிள்ளையின் பாடல்களை யாழிலே இசைத்துப்பரமன் செவிகுளிர. கேட்போர் மனமுருகப் பாடி வருவாராயினர் இவர் பாடிய 16000 பாடல் களுள் இன்றைய காலத்திற்கேற்றதான 384 பதிகங்களே. இன்றுள்ளன. மூவர் பாடிய 797 பதிகங்களை அடங்கன் முறை என்பர். சிவாலய முனிவரின் பாராயணத்திற்காக அகத்தியரால் திரட்டப்பட்ட 25 பதிகங்களையும் அகத்தியர் தேவாரத்திரட்டு என்று முற்றோதல் செய்கின்றனர்.

தலம் பல கண்டு தரிசனம் செய்து வரும் போது திருநெல்வாயில் அகத்துறையில் முத்துச் சிவிகை, முத்துக்குடை என்பன வற்றை இறைவனிடமிருந்து பெற்றார். அற்புதங்கள் பல ஆற்றிய இவர் அப்பரைச் சந்தித்து இருவரும் பலசாதனைகள் ஆற்றினர். மக்கள் மனத்தில் இடம் பிடித்தனர். சைவ விழிப்புணர்வு தோன்றியது.

பாண்டி மன்னன் கூன்பாண்டியன் (நெடுமாறன்) சோழன் மகள் மங்கையர்க்கரசியாரை மணமுடித்தான். முதன் மந்திரி குலச்சிறையார். கூன்பாண்டியன் ஆட்சியிலே சைவம் குன்றிச் சமணம் தழைத்தது மன்னனும் சமணம் சார்ந்தான். மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் சைவம் காக்க வழிதேடினர். அவ்வேளை அப்பரும் ஆளுடைய பிள்ளையாரும் திருமறைக் காட்டில் வந்து தங்கியிருந்தனர். மங்கையர்க்கரசியாரால் ஏவப்பட்ட தூதுவரின் அழைப்பால் மதுரை வந்தடைந்த சம்பந்தர் கூன் பாண்டியனின் வெப்பு நோயை

★ பேச்சைவிட மௌனமே சிறந்தது. ★

நீக்கித் திருநீற்றின் பெருமையை நிலைநாட்டி வெறிகொண்ட சமணரோடு வாதிட்டு அவர்களது அகந்தையை அடக்கிச் சைவம் காத்தனர். சமண பௌத்தரை மடக்கினார். புனல் வாதம், அனல் வாதத்தாற் சைவப் பெருமைகாட்டி மன்னனையும் மனம் மாற்றி சைவ நெறிக்கு மாற்றினார்.

காலம் கரைபுரண்டு ஓடுகின்றது. பிள்ளைப் பருவம் மாறியது. திருமணப்பருவம் வந்தது. பெற்றோரின் மனக்கருத்தை மீறமுடியாது திருமணத்தைக் கொள்ள வேண்டியதாயிற்று. அக்கினியைக் கண்டு தீவண்ணனை நினைந்தார். ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' என்னும் தேவாரப்பதிகத்தைப் பாடியருளினார். அங்குள்ளார் பிறவித்துயர் நீக்க எண்ணி யாவரையும் அப்பேரொளியிற் புகுவீர் என்று ஆணையிட்டார். உய்ய வழிகாட்டிய பிள்ளையின் பாதமலரை வணங்கி யாவரும் சோதியினுட் புகுந்தனர். சம்பந்தரும் மனைவியின் கையைப் பற்றியவாறு அக்கினியை வலம் வந்து நமச்சிவாய என்ற நாமத்தை முழக்கிச் சோதியுட் கலந்தார் பேரொளிவாயிலும் மூடிக்கொண்டது. இதுநிகழ்ந்தது வைகாசிமாதம் மூலநன்னாளாகும்.

பலரால் வளர்க்கப்பட்ட சைவப்பயிர். இடையிடையே புறச்சமயத் தாக்குதலுக்கு முகங்கொடுக்க நேரிட்டாலும், அவ்வக்காலத்திலே தோன்றிய அவதார புருடர்களால் அழியாது காக்கப்பட்டது. மதமாற்றம் தலைதூக்கும் இக்காலத்திலும் இந்துமதம் சமயப் பெரியோர்களாலும், அறிஞர்களாலும், சமய நிறுவனங்களாலும் பேணப்பட்டு வருகின்றது. அண்மையில் இடம் பெற்ற 2வது உலக இந்து மாநாடு நமது சமயம் பற்றிய சிந்தனையை உலகறிய வைத்தமை பாராட்டிற்குரியதே

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

---

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே நீ ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் நீ பலவீனமாகவே ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமை படைத்தவன் என்று நினைத்தால் நீ வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்.

உன்னிடத்தில் அளவற்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள். பிறகு அந்த நம்பிக்கையை நாட்டிற்கு வழங்கு.

---

★ பக்தனின் உள்ளம் ஆண்டவனின் இருப்பிடம் ★

உ

# நூற்றாண்டு விழாவில் எங்கள் குருதேவர் அப்பு

திருமதி சித்ரா இரட்ணஜோதி (கனடா)

வாழையடி வாழையென வந்த திருக்கூட்டமரபில் ஞான ஒளியாய்த்திகழ்பவர் எங்கள் குருநாதர். இவரை நாம் அப்பு என்றே அள்ளூற அழைப்போம். நாம் ஓடி விளையாடிய பருவத்திலே எம்முடன் கூடிவிளையாடிய மறைஞானச் செல்வர் அவர்கள். குழந்தைகளோடு குழந்தையாய்க் குழந்தைகளுக்குத் தந்தையாய் முதியோருக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்த அவர்களும் ஒரு குழந்தமையுள் எம் படைத்தவரே தான். நாம் அப்பு என்றோம் பலர் சுவாமி என்றனர். அவரை வித்துவான் ஆறுமுகம் அவர்களும் பெரும் புலவர் சதாசிவம் பிள்ளையவர்களும் திருவாசகசுவாமி எனப் பாடியுள்ளனர். ஈழத்து அநுபூதிச் செல்வர்களில் இவர் நடந்த பாதை பிரத்தியேகமானது. அதுவே திருவாசகப்பெருவழி. அவரைத் திருவாசகப் பேரூற்று எனவும் போற்றுகிறார்கள். பிறப்பிலே பெற்றோர் வைத்த பிள்ளைத் திருநாமம் சபாரத்தினம். சிற்சபையிலே கூத்தாடும், சபாபதிமேல் எழுந்த ஞானநூல் திருவாசகம். அத்திருவாசகத்தையே சலியாது படித்துப் படித்துத் திருவாசகமயமானார் பின்சிவமயமானார் தான் உணர்ந்தவற்றை மற்றவர்கட்கும் உணர்த்தினார். அதனாற் பலர் திருவாசகத்திற் தோய்ந்தனர். அப்பெருமகான் மாணிக்கவாசகர் போன்று தற்சிறுமையுடன் வாழ்ந்தார்.

உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப் பிறப்பறுக்கும் எம்மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள் தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென் னகுறையே.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னியமன்னே
சிறைபெரு நீர்போற் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக்கேனே.

எனத்திருந்திய அன்பின் பெருந்துறைப்பிள்ளை பாடிய நெஞ்சையள்ளும் வாசகங்களை மனத்திலே பதிக்க நெறிப்படுத்திய ஞான வான் மறுவன்புலவு சின்னத்தம்பி சுவாமிகள். நீண்ட காலம் அவரின் அதிஷ்டான நிலையத்திற்றங்கியிருந்து தொண்டாற்றிய அப்பு எனக்கு ஏதும் உணர்த்தவில்லையே நீ யென்று மனோரதமாய் உசாவிய போது சொப்பனத்திலே உணர்த்தப்பட்ட வாசகம் இது தான்.

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே
போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக்
கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட
வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன்
தனிமை தீர்த்தே திருச்சதகம் 68

திருவாசகச் செழுமறை முனிவராகிய திருவாதவூரீசன் அருளிய 656 திருவாசகங்களில் ஒரு பாடலான இதுதான் குருநாதனுக்கு முதல் உணர்த்தப்பட்ட பாடல். அதனாலே திருவாசகம் முழுவதுமே சபாரத்தினத்தின் நெஞ்சிலே படிந்து கரைந்த பாடமாயின. குருவருளும் திருவருளும் கைகூடத் திருவாசக மயமான அப்பு அதிலே கரைந்தார், கலந்தார், காலமெல்லாம் திருவாசகத்தையே உருப்போட்டார், உணர்ந்தார், உத்தமனை - உயிரோடு ஒன்றினார், உருகினார் பெருகினார், கண்ணீர் அனலிடைப்பட்ட மெழுகானார். எல்லாமே உருகின, உருகிய பனிக்கட்டியானார். தேவன் தேனாய் இனித்தான். திருவாசகமும் தேனாய் இனித்தது.

★ கடவுளைப் போற்று; மனிதனை நேசி. ★

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமேசிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே
என இறைவனை இறுகப்பிடித்தார்

ஈழத் திருப்பெருந்துறையாகிய திருக்கேதீச்சரத் தலத்தைப் போய்ச் சேர்ந்தார். மனித சஞ்சாரமில்லாத அக்காலத்திலே இவர் நாலாமாளாய்ப் போய்த் தன் இல்லத்தை அமைத்தார். தன் பணியைத் தொடங்கினார். காவியில்லை, கற்றைச்சடை இல்லை, உருத்திராக்கமில்லை, தண்டு கமண்டலமும் இல்லை. தூய வெண்ணாடையோடு தோளிலோர் சால்வை. மடியிலே வெற்றிலைச்சரை கையிலே திருவாசகஏடு, உயரமான தோற்றம் உத்தமமான தொண்டு, உறைவிடம் தேடி வருபவர்க்கு உறையுள், உண்டி வழங்குவார் திருவாசகத்திருவமுதும் வழங்குவார் தோட்டம் செய்தார், வயல் விதைத்தார், மாடு வளர்த்தார். தனி நின்று தன் பணி மேற்கொண்டார். கேதீச்சரம் வளர்ந்தது. அவர் பணியும் உயர்ந்தது. 1904 இல் அவதாரம் 1988-ல் உடலம் விட்டார் என்ற நினைவு தொண்ணூறாம் ஆண்டு நினைவாக எங்கள் குருநாதன் திருவாசக சுவாமிகளென்ற நூல் வெளியானது. நூற்றாண்டு விழா 2004 இல் ஆரம்ப காலத்தில் நிகழவிருப்பதாக அறியக் கிடக்கிறது.

மிகப் பழைய காலத்தில் மனிதனின் சராசரி வயது நூறு எனக் கண்டனர். வேதநூற் பராயம் நூறு மனிதர் தாம் புகுவரேனும் என்று பாடுகிறார். தொண்டர் அடிப்பொடியாழ்வார் இது ஒரு பூரண வயது எனலாம். பாரதியார் கனக்குஞ் செல்வம் நூறு வயது இவையுந் தருவாயென விநாயகரிடம் வேண்டுகிறார். வெள்ளி விழா, பொன் விழா, வைர விழா, பவள விழா மனிதரை மதிக்கும்விழாக்களா. சிலர் தமக்கும் விழா எடுக்கும் படி தூண்டுவிப்பதும் புகழுக்கும் பெருக்கும் நச்சுகிறவர்கள் இவர்கள். மதிப்புடன் வாழ்ந்தவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்களே. இதை வள்ளுவம் வடிவாய் எழுதி வைத்துளது.

★ புலன்களை அடக்கி ஆழ்வதே நன்று. ★

“ அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித்தமராய்க் கொளல்” குறள் 443

அவர்களைப் போற்றுவதனால் நாம் பெருமைப்படுகிறோம். இஃது ஆங்கில ஆண்டு மாதம் திகதியை முன்னெடுக்காமல் சைவசமயப் பாரம்பரியங்கட்கமையத்தமிழ்த்திகதியை அடிப்படையாகவைத்தே விழா எடுக்க வேண்டும். கன்னித்தமிழ் காப்போம் தமிழ் ஆண்டையும் காப்பது கட்டாயம். அந்த அடிப்படையில் சுவாமிகளின் அவதார தினத்தைத் தமிழாண்டு, மாதம், திகதி எதுவோ அதுவே விழா நாள் அது இனி ஜயந்தி நாளாகவே அமைதல் நன்று. மனத்துறவு கண்ட மகத்தான ஞானிக்கு எடுக்கும் விழா அகிலமும் தெரியப்படுத்தல் முக்கியமாகும் வசதியுள்ளவர்கள் திருவாசக இலக்கியத்தை அழகுற நூலாக்கி அத்தினத்தில் அன்பளிப்புச் செய்யலாம். இதுவரை வெளி வராத அவரது வாழ்க்கை வரலாற்றினை வெளியிடலாம். அவரின் நுண்ணிய திருவாக்குக்கள் மக்களையும் போய்ச் சேர எடுத்து வடிவமாக்கலாம். அவரின் நிழற்படங்களை வெளியிடலாம். இதுவரை வெளி வந்த நூல்களை அவ்விழாவிற் காட்சிக்கு வைக்கலாம். இன்று சைவ சமயம் என்னாகுமென்ற நிலையில் இருப்பதால் அதைப்பேண ஆலோசனை சொல்லலாம். சுவாமியில் ஈடுபாடுள்ளோர் நிதி உதவலாம் விழாச்சிறக்க நாம் துணை போவோமாக, வாழ்க குருதேவர் திருநாமம்.

ஓம் சாந்தி

---

ஏ மனமே, அன்பைப் பற்றியும், கடவுளைப்பற்றியும் மணிக்கணக்காக நீபேசினால் அன்பும் கடவுளின் அருளும் உனக்குக் கிட்டிவிடுமா? ஏன் பாசாங்கு செய்கிறாய்? கூலியை எதிர்பார்த்துத்தானே அன்பு செலுத்துகிறாய்? அன்போடு பேசுகிறாய்? கூலி குறைந்தாலோ, அல்லது கூலி கிடைக்காவிட்டாலோ நீ அன்பு செலுத்துவாயா? உண்மையைச் சொல் அன்பைப் பற்றி புத்தங்களில் படித்ததை ஒப்பிப்பதால் உண்மையான அன்பின் உணர்வை நீ அடைந்து அனுபவிக்க இயலுமா? உன்னிடம் கடுகளவு அன்பிருந்தால் போதும் சிறிதளவு நெருப்பை மிகப் பெரிய அளவுடையதாக்கலாம் உன்னிடம் கடுகளவு அன்பிருந்தால் அதைக் கடவுளிடம் காட்டுவாயானால் அது காட்டுத் தீயாக மாறிவிடும்.

---

★ அறத்தை விளங்க வைப்பது அன்பு. ★

உ (தொடர்ச்சி...

# 17-02-2002 இல் இருந்து நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர்

## விபரம்

| | |
|---|---|
| த. தங்கவடிவேல் தொண்டைமானாறு | 4000 00 |
| ஏ. அனுசாந்தன் குப்பிளான் | 1000 ... |
| து. சுந்தரதாஸ் குடும்பம் லண்டன் | 10000 ... |
| நா. வி. மு. நவரெட்ணம் கொக்குவில் | 1000 ... |
| திரு. த. யோகரெட்ணம் C. T. B. அச்சுவேலி | 1000 ... |
| சி. மணிவாசகர் சரசாலை | 1000 ... |
| சுபாஸ் கனடா | 17920 ... |
| கதிரமலை கஜேந்தினி உரும்பராய் கிழக்கு | 1000 ... |
| பரமலிங்கம் சந்நிதி | 500 ... |
| Dr. S. குகதாஸ் மூலம் திருமதி ஆனந்தராஜா அவுஸ்தி. | 5000 ... |
| P. T. பாலச்சந்திரன் அவுஸ்திரேலியா | 3000 ... |
| திரு. குலம் அவுஸ்திரேலியா | 2625 ... |
| Dr. V. குகமூர்த்தி நாவலர் வீதி யாழ்ப்பாணம் | 1000 ... |
| K. V. காசிநாதன் நாவலர் வீதி | 1000 ... |
| ஸ்ரீ நதியா நகைமாடம் யாழ்ப்பாணம் | 2000 ... |
| ஞானகுருபரன் ஜேர்மனி | 1000 ... |
| திரு. சுப்பிரமணியம் இளைப் பொலிஸ் அதிகாரி தம்பசிட்டி | 1500 ... |
| திரு. கனகசபாநாதன் கனடா | 3000 ... |
| திரு. முத்துக்குமாரசாமி கனகரட்ணம் குடும்பங்கள் கொக். | 2000 ... |
| M. சண்முகானந்தராசா பலாலி வீதி கந்தர்மடம் | 500 ... |
| சி. சிவசுப்பிரமணியம் ஆனந்த நிலையம் கரவெட்டி | 1000 ... |
| சி. சிவலோகலிங்கம் நிலாவெளி திருகோணமலை | 1500 ... |
| எஸ். ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | 1000 ... |
| சிவாம்பி கௌரி குடும்பம் பத்தமேனி | 2000 ... |
| கமலம் குருநகர் யாழ்ப்பாணம் | 3000 ... |
| க. செல்வராசா ஐயனார் கோவிலடி மல்லாகம் | 1000 ... |
| இ. இராசராகுலன் சுன்னாகம் | 1000 ... |
| இ. இராசலக்குமணன் சுன்னாகம் | 1500 ... |
| வக்ஷலா கோணேஸ்வரபவன், மஞ்சுளா இராஜகுலதேவன் | 2000 ... |
| ஐ. கோ. சந்திரசேகரம் யாழ்ப்பாணம் | 500 ... |

★ மேன்மையை நாடிச் செல்பவனுக்குச் சிறுகுறைகள் உறுத்தாது. ★

| | |
|---|---|
| திரு. பேரம்பலம் மனோகரன் உருத்திரபுரம் கிளிநொச்சி | 5000 ... |
| திரு. கிருஸ்ணபிள்ளை பவளம் வல்வெட்டி | 500 ... |
| நகுலேந்திரம் ஜீவநாதன் நவாலி | 1000 ... |
| கிருஸ்ணா தயானந்தா வலவந்தோட்டம் கரணவாய் | 500 ... |
| திருமதி யோ. நடராசா கொழும்பு 5 | 2000 ... |
| இ. ரவீந்திரன் இலங்கை வங்கி கொழும்பு | 500 ... |
| S. குகப்பிரசாதன் வல்வெட்டித்துறை | 2000 ... |
| வயிரமுத்து தங்கப்பழம் குடும்பம் புத்தூர் வடக்கு சுவிஸ் | 5000 ... |
| மு. கணேஸ் இணுவில் | 3 மூடை நெல் |
| இ. இரத்தினசோதி வல்வெட்டித்துறை | 1000 ... |
| K. இராமநாதன் சத்திரங்கை கம்பர்மலை | 1 மூடை அரிசி |
| க. காசிராஜர் குப்பிளான் வடக்கு | 900 ... |
| குட்டி தொண்டைமானாறு | 1 மூடை புளி |
| திரு. திருமதி ந. மகேந்திரன் வளலாய் | 1000 ... |
| T. தியாகலிங்கம் S. V. M. யாழ்ப்பாணம் | 1 மூடை அரிசி |
| சி. ஜெயக்குமார் குகன் ஸ்ருடியோ பருத்தித்துறை | 5000 ... |
| T. சுந்தரதாஸ் குடும்பம் (வண்ணம்) லண்டன் | 10,000 ... |
| தம்பு துரைராசா குடும்பம் கொழும்பு | 2900 ... |
| த. துரைராசா வவுனியா | 1மூடை அரிசி |
| காந்தன் ரமணன் மாயக்கை புலோலி | 500 ... |
| பசுபதி வள்ளிப்பிள்ளை மாயக்கை புலோலி | 500 ... |
| மங்கையர்க்கரசி கொக்குவில் | 3000 ... |
| Dr சி. கதிரவேற்பிள்ளை கரவெட்டி | 500 ... |
| V. சேனாதிராஜா சாயி இல்லம் கரவெட்டி | 1000 ... |
| செ. சந்திரலிங்கம் தம்பசிட்டி பருத்தித்துறை | 2000 ... |
| தி. இராசரெத்தினம் V. R. M. தாவடி | 2மூடை அரிசி |
| சி. செல்வராசா இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி | 500 ... |
| சி. சிவலோகம் ஆசிரியர் இமையாணன் உடுப்பிட்டி | 500 ... |
| ஸ்ரீமுருகன் குமுதினி கரணவாய் | 1000 ... |
| சு. பகீரதன் மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய் | 1000 ... |
| திரு. யோகநாதன் அல்வாய் | 1500 ... |
| ஆ. முரளிகா கல்வியங்காடு, யாழ். | 1000 ... |
| பொ. வியாகேஸ் துவாளி வீதி, உடுப்பிட்டி | 1000 ... |
| செல்வமாணிக்கம் தாட்சாயினி இமையாணன் | 1000 ... |
| யோகேஸ்வரன் தர்ஷினி அராலி மத்தி, வட்டுக்கோட்டை | 1000 ... |
| மார்க்கண்டு தயாக்குமரன் | 500 ... |
| ஆ. சரவணமுத்து கனடா | 10000 ... |

★ போலியான நண்பனை விட வெளிப்படையான எதிரியே மேல். ★

| | |
|---|---|
| து. சிவலோகராஜா கனடா | 2000 ... |
| A. ஜெயராஜா உடுவில் கிழக்கு, சுன்னாகம் | 500 ... |
| சு. நல்லதம்பி ( சிவம் மூலம் ) தொண்டைமானாறு | 1500 ... |
| K. சத்தியபாமா அவுஸ்திரேலியா | 2000 ... |
| நா. கந்தப்பு தோப்பு, அச்சுவேலி | 1000 ... |
| திரு. திருமதி நவரெத்தினம் குடும்பம் லண்டன் | 10150 ... |
| மாணிக்கராசா சுரேந்திரராசா நயினாதீவு | 1000 ... |
| முருகேசு சுவாமிகள் அடியார் சார்பில் ஆ. அருணாசலம் | 30000 ... |
| சுப்பிரமணியம் சண்முகநாதன் டென்மார்க் | 12500 ... |
| T. சண்முகவரதன் தொண்டைமானாறு, அவுஸ்திரேலியா | 10500 ... |
| சு. சிவபாலன் அவுஸ்திரேலியா | 4690 95 |
| க. சிவஞானம் பிரான்ஸ் | 7003 00 |
| பி. மாணிக்கவாசகர் சுவீஸ் | 2000 ... |
| R. இரவீந்திரன் குடும்பம் அவுஸ்திரேலியா | 10000 ... |
| ம. இந்துசேகரம் குடும்பம் அவுஸ்திரேலியா | 14000 ... |
| செ. செல்வரெட்ணம் சுழிபுரம் | 2000 ... |
| ப. திருநாவுக்கரசு காரைநகர் | 1000 ... |
| மு. குமாரவேல் கொழும்பு | 1000 ... |
| செல்வி M. இராமலிங்கம் சகோதரிகள் வண்ணார்பண்ணை யாழ். 2 மூ. அரிசி | 1000 ... |
| த. தேவராசா கோப்பாய் | 1000 ... |
| க. யோகரெட்ணம் கண்டி றோட், கொடிகாமம் | 700 ... |
| கு. சிவராஜசர்மா இலங்கை வங்கி, யாழ் | 1000 ... |
| S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் யாழ். | 1000 ... |
| த. வரதகஜன் வேலணை மேற்கு, ( கனடா ) | 6000 ... |
| ந. ஜவகர்லால்நேரு வேலணை ( கனடா ) | 12000 ... |
| நா. குகன் சகோதரர் லண்டன் | 1500 ... |
| தேவி தொலைத்தொடர்பு ஸ்ரான்லி வீதி, யாழ். | 2000 ... |
| தேவப்பிரசாதன் தம்பதிகள் | 10000 ... |
| தா. பாலசுந்தரம் ஸ்ரீவரதராஜன் விநாயகர் ஆலயம் | 10000 ... |
| பேராசிரியர் சிவசாமி மூலம் A. சண்முகராஜா U. K. | 15000 ... |
| P. பரிமளாதேவி குடும்பம் முருகேசுசுவாமி அடியார்கள் சார்பில் கொழும்பு | 45000 ... |
| முருகையா குடும்பம் கொழும்பு | 2250 ... |
| ஜெயசுந்தரம் | 500 ... |
| சிவனேசன் | 750 ... |
| அனித்தா | 3000 ... |

[தொடரும்......

★ மனச்சாட்சியே ஒரு சிறந்த நீதிபதி. ★

# ஔவையார் அருளிய ஆத்திசூடி

( உரையும் விளக்கமும் )

## நுண்மை நுகரேல்

நுண்மை - ( நோயைத் தருகிற ) சிற்றுண்டிகளை, நுகரேல், உண்ணாதே.

நோயைத்தரும் சிற்றுண்டிகளைக் கண்டபோதெல்லாம் சாப்பிடாதே. (69)

## நூல்பல கல்

நூல்பல - ( அறிவை வளர்க்கின்ற ) நூல்கள் பலவற்றையும், கல் - நீ கற்றுக்கொள்.

பாட நூல்களைப் படிப்பதோடு நின்று விடாது பல்வேறு புத்தகங்களையும் நீ படிக்க வேண்டும். (70)

## நெற்பயிர் விளை

நெற்பயிர் - நெல்லுப்பயிரை, விளை ( நீ வேண்டிய முயற்சி செய்து ) விளைவி.

உழவுத் தொழிலே மிகச் சிறந்த தொழில். அதனை நீ இழிவாகக் கருதாதே. நல்ல முறையில் உரம் இட்டு நெற்பயிரை மிகுதியாக விளையச் செய்ய வேண்டும். (71)

## நேர்பட வொழுகு

நேர்பட - ( உன் ஒழுக்கம் கோணாமல் ) செவ்வைப்பட, ஒழுகு நீ நட.

நல்லொழுக்கம் உள்ளவர் என்றும் செவ்வையான பாதையில் நடந்து உயர்வடைவர், நீயும் ஒழுக்கம் தவறாமல் செவ்வையான வழியில் நடக்க வேண்டும். (72)

## நைவினை நணுகேல்

நை - ( பிறர் ) கெடத்தக்க, வினை - தீவினைகளை, நணுகேல் ( நீ ஒரு போதும் ) செய்யாதே.

கொடிய காரியங்களைச் செய்ய நீங்கள் நினைக்கக்கூடாது (73)

## நொய்ய வுரையேல்

நொய்ய - ( பயன் இல்லாத ) அற்ப வார்த்தைகளை, உரையேல் ( நீ ஒரு போதும் ) சொல்லாதே.

★ பொய்யான வார்த்தைகளைப் பேசாதீர்கள். ★

பயன் தரும் வார்த்தைகளைக் கூற வேண்டும். பயனற்ற வீண் சொற்களைத் தவிர்க்க வேண்டும். (74)

**நோய்க் கிடங்கொடேல்**

நோய்க்கு - வியாதிகளுக்கு, இடங்கொடேல் - ( அவபத்தியம் முதலானவைகளைச் செய்து ) இடங்கொடாதே.

உன் உடலில் நோய்கள் உருவாவதற்கு நீ இடமளிக்காதே. (75)

**பழிப்பன பகரேல்**

பழிப்பன - ( அறிவுடையவர்களாலே ) பழிக்கப்படுவனவாகிய இழிச்சொற்களை, பகரேல் - நீ பேசாதே.

இழி சொற்களாவன: பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என்ற நான்குமாம்.

எல்லோராலும் போற்றப்படும் உன்னதமான வாழ்க்கையை நீ பெற வேண்டும். அதற்காகப் பிறரால் பழிக்கப்படும் இழி சொற்களைச் சொல்லாதே. (76)

**பாம்பொடு பழகேல்**

பாம்பொடு - ( பால் கொடுத்தவருக்கும் விஷத்தைக் கொடுக்கிற பாம்பைப் போல்பவர்களுடனே, பழகேல் - நீ சகவாசஞ் செய்யாதே

நாம் நன்மை செய்தாலும் தீமையே செய்யும் கொடியவர்கள் சிலர் உலகில் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களோடு நீ பழகக் கூடாது. (77)

**பிழைபடச் சொல்லேல்**

பிழைபட - பிழைகள் உண்டாகும் படி, சொல்லேல் ( நீ ஒன்றையும் ) பேசாதே.

நீ குற்றமின்றிப் பேச வேண்டும். பிறரால் மதிக்கப்படுபவனாக, கௌரவிக்கப்படுபவனாக நீ வளர வேண்டும் என்று ஔவைப்பாட்டி விரும்புகிறார். (78)

**பீடுபெற நில்**

பீடு பெருமையை, பெற – பெறும்படியாக. நில் - நீ நல்ல வாழ்விலே நில்.

நீ ஒழுக்கமுடன் வாழ்ந்து பிறருக்கும் உதவி செய்து வருவாயானால் உன்னை எல்லோரும் போற்றுவர். நீ பெருமையடைவதற்கான நல்ல வழியில் நடந்து செல் என்று வலியுறுத்துகிறார் ஔவையார். [வளரும்... (79)

★ புகழுக்குக் காரணமாகிய செயலை மறந்து விடாதே. ★

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# (சேனாதிபதி துரோணர்)

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்

பீதாமகர் பீஷ்மர் காயமடைந்து அம்புப்படுக்கையில் இருக்கிறார் என்பதனை அறிந்த கர்னன் அவரைக்கண்டு ஆசி பெறவிழைந்தான். பீஷ்மர் இருக்குமிடம் ஏகி ''ஐயனே கர்னன் வந்துள்ளேன்'' என்று உரைத்து வணங்கி நின்றான். பீஷ்மர் அவனைநோக்கி அன்புடன் பேசலானார். ''கர்னா நீ என்மீது அளவற்ற பகைமை கொண்டவனாய் இருந்தபோதும் உன்மீது எனக்கு வெறுப்பு இல்லை. ஆனால் நீ துரியோதனனுடன் சேர்ந்து தர்மவிரோதமான காரியங்களைச் செய்த பொழுது எனக்கு உன் மீது சினம் ஏற்பட்டதுண்டு. நீ என்னைக் காண வந்ததன் மூலம் உனது கௌரவத்தை நிலைநாட்டி விட்டாய் நீ அறிந்திராத உண்மை ஒன்றை இப்பொழுது உனக்கு நான் கூறுகிறேன். நீ தேரோட்டி ராதையின் புதல்வன் அல்லன். நீ பாண்டவர்கள் தாயாகிய குந்திதேவியின் புதல்வன் பாண்டவர்களின் மூத்தசகோதரன். எனவே நீ தீயவனாகிய துரியோதனனுடன்சேர்ந்து அதர்மமானகாரியங்களில் ஈடுபடாது, பாண்டவர்களுடன் சேர்ந்து கொள். பாண்டவர்களை எவரும் வெற்றி கொள்ள முடியாது. அதுமட்டுமன்றி நீயும் கண்ணனைப் போன்றும் அர்ச்சுனனைப் போன்றும் சிறந்த புஜபராக்கிரமம் உடையவன். பகைமையை மறந்து எல்லோரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழுங்கள்'' என்று அன்பாக உரைத்தார்.

பீஷ்மரின் உரைகளைச் செவிமடுத்த கர்னன் ''ஐயனே செய்நன்றி மறவாத மனப்பாங்கு என்னைத் துரியோதனனுக்கு விரோதமாக நடக்கத் தடை செய்கிறது இதனால் நான் எனது உடல், பொருள், ஆவி அனைத்தையுமே துரியோதனனுக்காக அர்ப்பணிக்க முடிவு செய்துள்ளேன். அதுமட்டுமன்றி, நீடித்து வந்த நெடுநாட் பகையை என்னால் விலக்கிக்

கொள்ளமுடியவில்லை. ஆகவே பாண்டவர்களுடன் நான் யுத்தம் புரிவதற்குத் தாங்கள் அநுமதி தரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். கர்னனின் உரைகளைச் செவிமடுத்த பீஷ்மர், ''நீ கூறியவற்றிலிருந்து உன்னால்ப் போர் செய்யாது இருக்க முடியாது என்று புலப்படுகிறது. ஆயினும் தர்மத்திற்கு விரோதமாகப் போர் செய்யாதே. எங்கு தர்மம் இருக்கிறதோ அங்கு வெற்றி நிச்சயம். இதனைக்கருத்திற் கொண்டு நீ நடப்பாயாக'' என்று கர்னனுக்குப் புத்திமதிகளைக் கூறினார். இவற்றை எல்லாம் கேட்டுக்கொண்ட கர்னன் அவரை வணங்கி விடை பெற்றான்.

பீஷ்மரிடமிருந்து விடை பெற்ற கர்னன் கௌரவ சேனைகள் இருக்குமிடத்தை அடைந்தான். பத்துநாட்களும் போரில்க் கலந்து கொள்ளாதிருந்த கர்னன் இனிப் போரிடுவான் என்பதனை அறிந்த கௌரவப் படையினர் ஆரவாரஞ்செய்துகர்னனை வரவேற்றனர். அப்படையினரின் உற்சாகத்தைக் கண்டு கொண்டகர்னன் ''நண்பர்களே! அர்ச்சுனனது ஆற்றலுக்கு பீஷ்மரேஈடுகொடுக்கமுடியாதபோது நான் எம்மாத்திரம்? ஆயினும் பீஷ்மர் கௌரவசேனைகளைப் பாதுகாத்தமையைப் போன்று நானும் உங்களைப் பாதுகாப்பேன். நண்பர்களைப் பாதுகாப்பதே எனது கடன். எனவே யுத்தத்திற்கு ஆயத்தமாகுங்கள்'' என்று அவர்களை மேலும் உற்சாகப்படுத்தினான்.

கர்னனின் வருகையால் மகிழ்வடைந்த துரியோதனனும் கர்னனை அணுகி உற்சாகத்துடன் வரவேற்றான். கர்னனை வரவேற்ற துரியோதனன் கர்னனை நோக்கிக் ''கர்னா! மாலுமி இல்லாத படகைப் போன்று தத்தளித்த கௌரவசேனை உன் வரவால் மகிழ்வடைகிறது. சேனாதிபதியாக இருந்து எம்மைக்காத்த பீஷ்மர் அம்புப் படுக்கையில் இருப்பதனால் நாம் தக்க ஒருவரைச் சேனாதிபதியாக்க வேண்டும். யாரைச் சேனாதிபதியாக நியமிக்கலாம்'' என்று வினாவினான். துரியோதனனின் கேள்விக்கு விடையாகக் கர்னன் ''மன்னா எமது பக்கத்தில் இருக்கும் மன்னர்கள் எல்லோருமே சிறந்த வீரர்கள் இதில் குறிப்பிட்ட மன்னர் ஒருவரை நியமிப்பதனால் மன்னர்களின் மனக்கசப்பை நாம் சம்பாதிக்க வேண்டும். எனவே வயதில் மூத்தவரும் மன்னர்களின் குருவாக இருப்பவருமான துரோணாச்சாரியாரை நாம் சேனாதிபதியாக்கினால் மிகவும் நன்மை பயக்கும்'' என்று கூறலானான். கர்னனின் யோசனை துரியோதனனுக்கும் உடன்

பாடாக இருந்தமையால் துரோணரைச் சேனாதிபதியாக்கி தனது படைகளுக்கு வெற்றி ஈட்டித்தருமாறு வேண்டிக்கொண்டான்.

தனக்கு சேனாதி பதவியை அளித்து இருக்கிறான் துரியோதனன் என்பதால் மகிழ்வடைந்த துரோணர் அவனை நோக்கி "மன்னா நீ என்னைச்சேனாதிபதியாக நியமித்து என்னைக் கௌரவப்படுத்தியுள்ளாய், உனக்கு விருப்பம் ஏதாவது இருந்தால் அதனைக்கூறு நான் நிறைவேற்றி வைக்கிறேன்" என்று கூறலானார் துரோணரின் உரைகளைச் செவிமடுத்த துரியோதனன் சிந்தித்து "குருவே யுதிஷ்டிரரை உயிருடன் பிடித்து என் முன் நிறுத்த வேண்டும் இதுவே எனது விருப்பம்" என்று கூறலானான் யுதிஷ்டிரரை வதம் செய்யாது உயிருடன் பிடிக்கும் எண்ணம்துரோணருக்குமகிழ்ச்சியைக் கொடுத்தது. துரியோதனனின் வஞ்சக நெஞ்சத்தைத் துரோணர் அறிந்து கொள்ளாமையால் மகிழ்ச்சியடைந்தவராய்த் துரியோதனனை நோக்கி "மன்னா மிகவும் நன்று, யுதிஷ்டிரரை உயிருடன் பிடித்து உன் முன் நிறுத்துகிறேன். அவனது பாதி ராஜ்ஜத்தை நீ கொடுத்து பாண்டவர்களுடன் சமாதானமாகிப் போகும் உனது எண்ணம் மிக நன்று" என்று மகிழ்வுடன் பதில் கூறலானார்.

துரோணர் இவ்வாறு கூறியமையைச் செவிமடுத்த துரியோதனன் "ஆச்சாரியரே! யுதிஷ்டிரரை உயிருடன் பிடித்தால் மீண்டும் ஒரு தடவை சூதாட அழைப்பேன். சூதாட்டத்தில் தோற்கும் அவனை மீண்டும் வனவாசத்துக்கு அனுப்பி விடலாம். பின்னர் நான் நிம்மதியாக நாட்டை ஆள்வேன்" என்று கூறியதும் துரோணர் மிகவும் கலக்கமடைந்து "துரியோதனா! யுதிஷ்டிரரை உயிருடன் பிடிப்பது சுலபமில்லை. அர்ச்சுனன் இருக்கும் வரை யுதிஷ்டிரரைப் பிடிக்க முடியாது. அர்ச்சுனன் யுதிஷ்டிரரை விட்டு விலகி இருக்கும் சந்தர்ப்பத்தில் அவரைப் பிடித்து விடுகிறேன்" என்று பதிலுரைத்தார்.

பாண்டவர் பக்கம் துரோணரின் உள்ளம் இருக்கிறது என்பதனைத் துரியோதனன் துரோணரின் பதிலால் உணர்ந்து உள்ளம் சோர்ந்தான். ஆயினும் சோர்வினை வெளிக்காட்டிக் கொள்ளாது சிந்தனை செய்தான் துரோணர் யுதிஷ்டிரரை உயிருடன் பிடிக்க உறுதிமொழி கூறியுள்ளார் என்ற செய்தியை வெளியிட்டுப் பகிரங்கப்படுத்தினால் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள் என்ற நினைப்பு துரோணரை நிச்சயமாக யுதிஷ்டிரரைப்பிடிக்க வைக்கும் என்று முடிவு செய்து, அச்செய்தியை ஒற்றர்கள் மூலம் எல்லோருக்கும் பரவச்செய்தான்.

★ ஒருவன் தன்னைத் தானே காக்க வேண்டும் ★

இச்செய்தியைப் பாண்டவர்கள் அறிந்து கொண்டனர். இதனால் யுதிஷ்டிரரை விட்டு எந்நிலையிலும் அர்ச்சுனன் பிரியக் கூடாது என்று தங்களுக்குள் முடிவு செய்து கொண்டனர் பாண்டவர்கள். யுதிஷ்டிரரை உயிருடன் பிடித்துத் தருவதாகக் கூறியமையால் துரியோதனன் ஓரளவு உற்சாகத்துடன் இருந்தான் இந்நிலையிற் பதினோராம் நாட் போர் தொடங்கலாயிற்று.

(தொடரும்...

# சக்தியைத் தாருமையா!

இராகம்: மாயாமாளவ தாளம்: ஆதி

பல்லவி

ஐங்கரனுக் கிளையோனே ஆறுமுக மானவனே
திங்களைப் போன்றே திருமுக முடையவனே

அநுபல்லவி

வேலாலே கோலோச்சி வெற்றியைத் தருபவனே
நாவாலே துதிக்கின்றோம் நம்துயர் தீர்த்திடுவாய்

சரணம்

அசுரரை வீழ்த்தவே அன்றமர் புரிந்தே
அமைதி வாழ்வையே அமரர்க்கு அளித்தவனே
நாமிங்கு போராடி நலிவுற்று நிற்கின்றோம்
நீயிங்கு வேலேந்தி நிம்மதியைத் தந்திடுவாய்

சமாதான மேகம் சூழ்கின்ற போதினிலே
சங்கடங்கள் நிகழாமல் காத்திடு வேலவனே
சிந்தையில் நல்லெண்ணம் சிறந்து விளங்கிடவே
கந்தனே சந்நிதிவேலா சக்தியைத் தாருமையா!

குகதாசசர்மா சிவகுமார்

★ அவசியமற்றதை அகற்றுவதே அழகு ★

உ

# வருடாந்த

# வைகாசிப் பெருவிழா

# 2003

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து வைகாசிப் பெருவிழா வருடந் தோறும் நடாத்தப்பட்டு வருகிறது.

முருகப்பெருமான் உதித்ததினம் தொடர்பாக இந்த விழாவை மேற்கொள்ளும் பொழுது எம்பெருமானுக்கு விஷேச அபிஷேகங்கள் செய்து எம்பெருமான் தொடர்பான சிறப்பையும், பெருமைகளை யும் அடியார்களுடன் பகிர்ந்து எம்பெருமானுடைய அருளை நாடி நிற்கின்ற செயற்பாடுகளுக்கு விழாவில் முக்கியத்துவம் வழங்கப்படு கிறது.

அதே நேரம் சைவத்திற்கும், தமிழிற்கும், சமூகத்திற்கும் தொண்டு செய்கின்ற பெருந்தகைகளை கௌரவித்து அவர்களை மகிழ்வித்து அவர்களுக்கு விருதுகள் வழங்கி அவர்களை அவர்களது பணிகளில் மேலும் ஊக்குவிக்கின்ற செயற்பாடுகளையும் காலத்தின் தேவை கருதி எமது பேரவை மேற்கொண்டு வருகிறது. ஆனாலும் எல்லா வருடங்களில் விருது வழங்கல் கட்டாயமாக இடம் பெறு கின்ற கைங்கரியமல்ல. அந்தந்த காலத்தில் காணப்படுகின்ற சூழ் நிலைகள் தேவைகள் என்பவற்றைப் பொறுத்து அதனில் மாற்றங் களையும் செய்து வந்தது போல இந்த வருடமும் விருது வழங்கு கின்ற செயற்பாட்டை மேற்கொள்வதில்லை என பேரவை முடிவு செய்ய வேண்டிய நிலமை ஏற்பட்டது.

ஆனாலும் வழமை போல வருடாந்த வைகாசிப் பெருவிழா 06 - 06 - 2003 வெள்ளிக்கிழமை வாராந்த வெள்ளி நிகழ்வுடன் இணைந்து நடாத்தப்பட்டது. முன்னாள் கல்விப்பணிப்பாளர் தற் பொழுது தேசிய கல்வி நிறுவனத்தில் கடமையாற்றுபவருமான மதிப் பிற்குரிய திரு. குமாரசாமி சோமசுந்தரம் M. A. அவர்கள் '' உதித்த னன் உலகம்உய்ய '' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவினை

★ பேருக்காகவும் புகழுக்காகவும் ஒன்றையும் செய்யாதே ★

நிகழ்த்தினார்கள். வழமை போல நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் வைகாசிப்பெரு விழாவிற்கு தலைமை தாங்கி வழி நடாத்தினார்கள்.

நல்லை ஆதீன முதல்வர் அவர்கள் முருகப்பெருமான் உதித்த தினத்தின் முக்கியத்துவத்தையும் அதனை அடியவர்கள் கொண்டாடுவ தன் அவசியத்தையும் அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்கள். இறை வனை வழிபடுவதன் முக்கியத்துவத்தை அதனால் எமக்கு ஏற்படும் நன்மைகளையும் உதாரணங்கள் மூலம் அடியார்களுக்கு எடுத்துக் காட்டினார்கள்.

சிறப்புச் சொற்பொழிவினை வழங்கிய திரு. கு. சோமசுந்தரம் அவர்கள் சைவ சமயிகளாகப் பிறந்தது நாம் செய்த பூர்வ புண்ணிய மெனவும், சிலர் அற்ப சலுகைகளுக்காக மதம் மாறுகின்ற தன்மைகளைக் குறிப்பிட்டு காலப்போக்கில் அவர்கள் தாங்களாகவே உணர்ந்து மீண்டும் எமது மதத்திற்கு மாறுகின்ற நிலமைகள் ஏற் பட்ட சம்பவங்களையும் குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

எமது சமயத்தில் தனியே சமயக்கருத்துக்கள் மட்டுமன்றி சமயம், தத்துவம், வாழ்க்கை நெறி ஆகிய மூன்று அம்சங்களும் இடம் பெற்றிருக்கும் சிறப்பையும் எடுத்துக் காட்டினார்கள்.

★ ★

## வைகாசிப் பெருவிழாவிற்கு
## ஆதரவுநல்கியோர்

வை. துரைராசா ஒஸ்கா வீதி உரும்பராய்
இ. இராசநாயகம் துர்க்கா மரக்காலை சண்டிலிப்பாய்
உரிமையாளர் காசிப்பிள்ளை அன்சன்ஸ் சங்கானை
உரிமையாளர் சுந்தர்சன்ஸ் மானிப்பாய்
உரிமையாளர் மகாராணி புடவையகம் யாழ்ப்பாணம்
லிங்கம் கூல்பார் உரிமையாளர் யாழ்ப்பாணம்.
உரிமையாளர் சண்முகானந்தா புடவையகம் யாழ்ப்பாணம்
S சுந்தரலிங்கம் "செல்வம்ஸ்" K. K. S. வீதி யாழ்ப்பாணம்
K. அருள்ச்செல்வம் நிர்வாகி புதிய விஞ்ஞானக் கல்விநிலையம் யாழ்.
வ. இராசையா கேணியடி திருநெல்வேலி

★ யாராவது துன்பப்படுவதைப் பார்த்தால் அவருக்கு உதவி செய் ★

மா. சிவமூர்த்தி வீடியோ கலாமினி அச்சுவேலி
லயன் K. செல்வரெத்தினம் J. P. அச்சுவேலி
Dr. சி. இராசலிங்கம் அச்சுவேலி
வே. வீரவாகு கண்டிஸ்ரோர்ஸ் அச்சுவேலி
மா. சிவஞானசுந்தரம் நிலஅளவையாளர் இடைக்காடு அச்சுவேலி
S. ஞானரூபன் அஜந்தாஸ் புடவை மாளிகை யாழ்ப்பாணம்
க. சொர்ணவடிவேல் கதிர்காமலிங்கம் அன்சன்ஸ் அளவெட்டி
ம. ஸ்ரீகாந்தன் அச்சுவேலி தெற்கு அச்சுவேலி
க. தர்மலிங்கம் J. P நீர்வேலி
செ. நவரெத்தினராசா (கப்புது) குப்பிளான் தெற்கு
கு. அருணகிரிநாதன் சிவன் வீதி ஆவரங்கால்
வே. பொன்னம்பலம் பாக்கியரெட்ணம் ஸ்ரோர்ஸ் சங்கானை
உரிமையாளர் கிருஸ்ணாஸ்ரோர்ஸ் சங்கானை
வ. ஆறுமுகம் அதிபர் / புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி
ஐ. இராமச்சந்திரா லவ்லேன் உடுவில்
க. சிவக்கொழுந்து J. P. உடுப்பிட்டி
பொ. குமாரசாமி சட்டத்தரணி நவிண்டில்
ச. வைத்தியநாதக்குருக்கள் பிரதமகுரு கந்தசாமிகோவில் பொலிகண்டி
Dr. E. கனகரெட்ணம் கொற்றாவத்தை வல்வெட்டித்துறை
சி. நாகலிங்கம் 'லிங்கம்ஸ்' கரணவாய் தெற்கு
த. கணேசமூர்த்தி இலங்கை வங்கி யாழ்ப்பாணம்
நா. தெய்வேந்திரம் இந்திராகபே நெல்லியடி
Dr. K. இராதாகிருஸ்ணன் நெல்லியடி
இ சரவணப்பெருமாள் மாணிக்கவளவு கரணவாய் தெற்கு
A. S. S. இராமச்சந்திரன் மாலிசந்தி அல்வாய்
சி. தங்கவடிவேலு (சிற்றி) நெல்லண்டை வீதி தும்பளை
ந. நற்குணம் சுசீலா நகைமாடம் பருத்தித்துறை
த. விமலேஸ்வரன் மாலிசந்தி அல்வாய்
V. அரியராசா தொண்டைமானாறு
வ. ஆ தங்கமயில் நிலஅளவையாளர் மாலிசந்தி
க. கந்தசாமி இளைப்பாறிய தபாலதிபர் கரணவாய் தெற்கு
ந. சுரேந்திரநாதன் அதிபர் மயிலியதனை தொண்டைமானாறு
செ. இரவீந்திரதாஸ் இமையாணன் உடுப்பிட்டி
த. சிவகுருநாதன் (பரம்) யூனியன் பேக்கறி கரணவாய்
S. பத்மநாதன் வங்கி முகாமையாளரும் வங்கி ஊழியரும்
M. S. K. மகேஸ்வரன் சாயி இல்லம் தாவடி வடக்கு
மு. நவரத்தினம் வீரப்பராயன் கரணவாய் தெற்கு

★ புலனடக்கம் கொண்ட மனிதனை தெய்வமாகப் போற்றலாம். ★

உ

# சந்நிதியான்

- ந.ஆரியரத்தினம் -



திரு. கே. தர்மலிங்கம் அவர்கள் தனது மாதச்சம்பளத்தைப் பெற்றுக் கொண்டதும் கொழும்பில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் தனது மகனுடைய செலவிற்கு வழங்குவதற்காக வழமை போல வவுனியாவில் இருந்து கொழும்பிற்கு செல்லும் இரவு ரெயினில் அதனை எடுத்துச் செல்கின்றார்.

அவ்வாறு எடுத்துச் செல்லும் வழியில் திடீரென எதிர்கொண்ட இரண்டு கொள்ளையர்கள் அவர் எடுத்துச் சென்ற பணத்தை அபகரித்து விடுகின்றனர். மாதாந்த சம்பளத்தில் மகனின் கல்விச் செலவிற்காக எடுத்துச் சென்ற பணம் அபகரிக்கப்பட்ட வேதனை ஒரு பக்கம், பணத்தைக் கள்வர்களிடம் பறி கொடுத்த அதிர்ச்சி மறுபக்கமுமாக அவ

ரது இதயம் வேகமாக அடிக்கத் தொடங்குகின்றது......

இந்த நிலையில் திரு. கே. தர்மலிங்கம் அவர்கள் திடீரென கண் விழிக்கின்றார்கள்.... அப்பொழுது தான் தெரிகின்றது. நடந்த சம்பவம் கனவில் இடம் பெற்றதென்பது. இவ்வாறு கனவில் ஏற்பட்ட நிகழ்வு என்பதை உணர்ந்தவுடன் திரு. கே. தர்மலிங்கம் அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டாலும் உள்ளத்தில் ஓர் மூலையில் பய உணர்வு ஒன்று இருப்பதை அவர் உணரத் தவறவில்லை.

மேலும் இந்தக்கனவை சாதாரண ஒரு விடயமாக எடுக்க முடியாதிருந்தமைக்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. நடந்து முடிந்த சம்பவம் கனவாக இருந்தாலும் திரு. தர்மலிங்கம் அவர்கள் தனது மகனுக்கு கொழும்பிற்கு பணத்தை எடுத்துச் செல்ல வேண்டிய செயற்பாடு நடந்தேறவேண்டிய செயற்பாடாகவே இருந்தது.

தற்பொழுது 151/6 பாடசாலை வீதி, றம்பைக்குளம் வவுனியா என்ற விலாசத்தில் வாழ்ந்துவரும் திரு. தர்மலிங்கம் அவர்கள் வவுனியா பொது சுகாதார வைத்திய சேவைப்பகுதியில் சிரேஷ்ட உத்தியோகத்தராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

1991 ஆம் ஆண்டு கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியலாளராக கல்வி கற்றுக் கொண்டிருந்த மகன் த. சிவாகரனுக்கு மாதா மாதம் வவுனியாவிலிருந்து கொழும்புக்கு பணத்தை எடுத்துச்சென்று வழங்குகின்ற காலகட்டத்திலேயே மேற்படி கனவு தொடர்பான நிகழ்வு இடம் பெற்றது.

திரு. தர்மலிங்கம் அவர்கள் கனவு என்பது வழமையான செயற்பாடு என்றும், அந்த வகையில் தான்கண்டகனவிற்கும்மிகையான முக்கியத்துவம் கொடுக்க விரும்பாது தமது செயற்பாடுகளை மேற்கொள்ளலானார்.

ஆனால் அவரது மனைவி திருமதி பவானி அவர்கள் இந்தக்கனவிற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து சிந்திக்கலானார். இது நாம் வழிபடுகின்ற குல தெய்வமான சந்நிதியானின் திருவருளால் நிகழ்ந்த ஒரு செயற்பாடு என்பதை கணவனுக்கு எடுத்துக்கூறி ஏதோ ஒரு ஆபத்து ஏற்பட இருந்தபடியால் தான் இந்தக் கனவு எமக்கு ஏற்பட்டதென்றும் அதனால் அடுத்த நாள் மேற்கொள்ள இருந்த பயணத்தை ஒத்திப்போடுவது பற்றிச் சிந்திக்கலானார்கள்.

★ மற்றவர் வாழ்க்கையை வருத்தி மகிழாதே. ★

இருந்த பொழுதிலும் பயணத்தை ஒத்திப்போடுவதானால் திங்கட்கிழமை இங்கே வேலைக்கு திரும்பி வரமுடியாது லீவு போடவேண்டிய சூழ்நிலையும், அதேநேரம் பணத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மகனுக்கு பணம் கிடைக்க முடியாது போய்விடுவதற்கான சூழ்நிலைகளையும்கருத்திற்கொண்டு குழப்பத்தின் மத்தியில் மிகவும் எச்சரிக்கையாக பயணத்தை மேற்கொள்வதெனவும் தமதுகுல தெய்வமான சந்நிதியான் காவற்றெய்வமாக எமக்குத் துணை செய்யத்தானே வேண்டும் என்றும் சந்நிதியானின் துணையுடன் பயணத்தை மேற்கொள்வதற்கும் முடிவு செய்தனர்.

திரு. தர்மலிங்கம் அவர்கள் சனிக்கிழமை இரவு வவுனியாவில் புகையிரதம் ஏறி மிகவும் கவனமாக தனது பயணத்தை மேற்கொண்டு கொழும்பு கோட்டையில் போய் இறங்கினார். அதிகாலையிலேயே புகையிரதம் கோட்டையைச் சென்றடைந்தமையால் அவர் வழமையாகச் செல்வது போல அங்கிருந்து பஸ் எடுத்து பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் போய் இறங்கினார். அங்கே முகம் கால் கழுவி கதிரேசனை வணங்கி முடியவும் காலையில் நிலம் நன்கு தெளியவும் சரியாக இருந்தது. தற்பொழுது திரு தர்மலிங்கம் அவர்களுக்கு நிம்மதியும் தைரியமும் ஏற்பட்டது. உண்மையில் வழியில் எதிர்பார்த்தது மாதிரியாக எந்தவிதமான ஆபத்துக்களோ இழப்புக்களோ அவருக்கு ஏற்படவில்லை. தனது மனைவி பவானி அவர்கள் முதல் நாள் கண்ட கனவினை மிகைப்படுத்திச் சிந்தித்தது அநாவசியமானதென்று நினைத்தாலும் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை என்பதையிட்டு அவர் திருப்தியடையத் தவறவுமில்லை.

தற்பொழுது வெள்ளவத்தையில் பிறெட்றிக்கா வீதியில் குடியிருக்கும் தனது மகனிடம் பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலிலிருந்து வழமை போல நடந்து செல்லலானார். காலையில் ஓரளவு சனநடமாட்டம் ஏற்படத் தொடங்கியிருந்ததால் உள்ளூர இருந்த பயஉணர்வும் அற்றுப் போக தனது மகனை சந்திக்கப் போகும் மகிழ்ச்சியுடன் பிறெட்றிக்கா வீதியை சென்றடைந்தார்.

அப்பொழுது திடீரெனத் தென்பட்ட இரண்டு சி. ஐ. டி பொலிசார் திரு. தர்மலிங்கம் அவர்களை மறித்து சோதனையிட முற்பட்டனர். இதனால் திரு. தர்மலிங்கம் அவர்கள் பதட்டமடைந்தாலும் தான் ஒரு அரசாங்க . உத்தியோகத்தர்

★ அன்பு எதையும் ,பொறுத்துக் கொள்கிறது. ★

என்ற நிலையில் தனது தேசிய அடையாள அட்டை, உத்தி யோகத்தருக்கான அடையாள அட்டை என்பவற்றை எல்லாம் காண்பித்ததினால் அவர்களும் இயல்பாக சோதனையைநடாத் துவது போல நடாத்தமுற் பட்டனர்.

ஆனாலும் அவரது சூட்கேஸ், அவரது உடம்பு முழுவதையும் சோதனையிட்ட சி. ஐ. டி யின ரில் ஒருவனுக்கு அவரது இடுப் பில் பணம் இருப்பதில் சந்தே கம் ஏற்பட்டுவிட்டது.

பிரதான வீதியானகாலிறோட் டிலிருந்து வில கி பிறெட்றிக்கா றோட் என்ற குறுக்கு றோட் டின் முகப்பிலேயே இந்த சம்ப வம் நடந்து கொண்டிருந்தது. அந்தக்குறுக்கு றோட்டில் மோட் டார் சைக்கிளுடன் நின்ற சி. ஐ. டி திரு. தர்மலிங்கத்தை சோதனைகள் முடிந்த நிலையி லும் கையினால் சைகை காட்டி குறுக்கு றோட்டுக்குள் தனக்கு கிட்ட வருமாறு அழைத்துக் கொண்டிருந்தான். நிலமையைப் புரிந்து கொண்ட திரு தருமலிங் கம் அவர்கள் அப்பொழுது தான் தான் கண்ட கனவினையும் அதன்அர்த்தத்தையும் முழுமை யாகப் புரிந்து கொண்டவராக சந்நிதி வேலவனை மனதில் சிந் தித்தவாறு தனது உடலிலும் உள்ளத்திலும் முழுமையாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டவராகக் குறுக்குறோட் டிலிருந்து பிரதான வீதிக்கு வந்து அந்தப் பிரதான வீதி வழியாக மிகவேகமாக ஓட்டமெடுக்கலா னார்.

இவ்வாறான அசட்டுத்தைரி யத்துடன் செயற்படுவார் என் பதைஎதிர்பாராது சி. ஐ. டி உரு வத்தில்இருந்த கொள்ளையர்கள் திகைத்து நிற்க பிரதான வீதி வழியே வந்த மினிபஸ் காரர் ஓடிவருபவர் ஆபத்தில் சிக்குப் பட்டு ஓடிவருகின்றார் என்பதை உணர்ந்தவராக மினிபஸ்ஸை அவர் ஏறுவதற்கு சாதகமாக நிப்பாட்ட அவர் அந்தபஸ்சில் ஏறிக்கொண்டார். அதன்பின்பு ஏனையவர்களின் உதவியுடன் ஆபத்து ஏதுமின்றி அவரால் தப்பிக்கொள்ள முடிந்தது.

சம்பவம் நடந்த ஒரு சில வருடத்தின் பின்பு இந்தச் சம்ப வம் பற்றி திருமதி பவானி தர்ம லிங்கம் அவர்கள் அடியேனிடம் உணர்வு பூர்வமாக எடுத்துக்கூறி பயணத்தின் முன்பும் பயணத் தின் பொழுதும் யாக்கிரதை யாக இருந்தமையால் தான் தனது கணவன் தப்பமுடிந்தது என்றும் அவ்வாறு எச்சரிக்கை யாக இருந்து தாங்கள் காப்பாற் றப்பட்டதற்கு சந்நிதியானின் திருவருளே காரணமென்பதை

உணர்வு பூர்வமாக எடுத்துக் கூறியிருந்தார்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு திரு. தர்மலிங்கம் பவானி குடும்பத்தினர் சந்நிதியானிடம் வந்திருந்த பொழுது தருமலிங்கம் அவர்களே நேரடியாக இந்த சம்பவம்பற்றி மிகவும் விளக்கமாக அடியேனிடம் மீண்டும் எடுத்துக் கூறினார்கள்.

அவர் இரண்டு விடயங்களை முக்கியமாக என்னிடம் எடுத்துக் கூறினார். ஒன்று அந்தக் கனவு ஏற்பட்டிருக்காவிட்டால் தான் கவனவீனமாக இருந்திருப்பேன் இரண்டாவதாக ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று உணர்ந்தவுடன் தான் சந்நிதியானை நினைத்ததாகவும் அந்தக்கணமே தனக்கு எங்கிருந்து அந்தத்துணிச்சல்வந்ததோ தெரியாது தான் மிகவேகமாக செயற்பட்டது பற்றியும் எடுத்துக்கூறி இவை இரண்டும் இடம் பெறாவிட்டால் நிச்சயம் தான் கனவில் கண்டது போல வழிப்பறி இடம்பெற்றிருக்குமென்றும் இது சந்நிதியானின் திருவருளே என்பதையும் எங்கள்குடும்பத்தில் அனைத்தும் அவனை நம்பியே இடம்பெறுகின்றன எனவும் எடுத்துக் கூறினார்கள்.

தற்பொழுது மகள் க. பொ. த (உ. த.) சோதனை எடுத்து விட்டார். நாம் குடும்பமாக வவுனியாவிலிருந்து சந்நிதியானிடம் வந்து தங்கி வழிபடுகின்றோம். எந்த வழிவிட்டாலும் அது நல்ல வழியாகத்தான் இருக்கும் என்று அவரது மனைவி பவானி அவர்கள் தற்பொழுது சந்நிதிக்குவந்ததற்கான காரணத்தை எடுத்துக் கூறினார்கள்.

கணவன், மனைவி, பிள்ளைகள் அனைவரும் சந்நிதியானுக்கு அடிமையானவர்கள். முருகேசு சுவாமிகளின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் பாத்திரமாகி அவரின் ஆற்றுப்படுத்தலினால் சந்நிதியானிடம் அளவில்லாத பக்தி கொண்ட குடும்பமாக இவர்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

உண்மையான உள்ளுணர்வுடன் வழிபட்டு அவனது திருவருளுக்கு பாத்திரமானவர்களது துன்பங்களை போக்குவதற்காக, அல்லது, அவர்களை ஆபத்திலிருந்து காப்பதற்காக சந்நிதியான் என்றும் துணையாக இருந்து வருகின்றான் என்பது மட்டுமல்ல அவர்களைத் தானாகவே நாடி வந்து காக்கும் கடவுளாகவும் அற்புதம் செய்வதனால் தானே ஆயிரம் ஆயிரம் அடியார்கள் அங்கே வந்தவண்ணமுள்ளனர்.

ஓம் முருகா!

★ ★ ★

# சந்நிதியான் ஆச்சிரம
# சைவ கலை பண்பாட்டுப் பேரவையோர் வாழ்க

சந்நிதியான் ஆச்சிரமம்
என்னும் பேரால்
சார்ந்தன சைவக் கலைவளர்க்கும்
பேரவையோடு
தன்னிகரில் லாதபெருந்
தொண்டை ஏற்று
சண்முகனின் இனியமலர்ப்
பாதம் வேண்டி
அந்நிய வூர் புலம்பெயர்ந்து
சென்றே வாழும்
அன்பர்களின் நிதியோடு
அரிய எங்கள்
மன்னிய வூர்ப் பெரியோரும்
வழங்க ஏற்று
வாரியென அன்னமிட்டு
வருகின்றாரால்
கணக்கெழுதி வைப்பிட்டுக்
கவனம் பண்ணி
கந்தனது அடியவர்கட்
கன்றி மற்றும்
இணக்கமுடன் வறியார்க்கு
மருந்தோ டேற்ற
ஏற்றதுணைப் பொருளுடனே
காசும் நல்கி
பணத்தின் நிலை குறையாது
பண்டா ரத்தைப்
பார்த்திடுவான் முருகனென்று
அவன் தன் பாதம்
வணக்கமுடன் சந்நிதியில்
ஆற்று கின்றார்
வாழ்கசபை யாருடனே
வழங்குவோரே.

கலாபூஷணம், முதுபெரும் புலவர்
வை. க. சிற்றம்பலம்

உ (தொடர்ச்சி...

# திருவருட் பயனின் வசனரூபம்

திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

## ஆணவமலத்தின் தன்மைபற்றிக் கூறும் இருள் மலநிலை

அறியாமையே வடிவாகிய ஆணவம் என்னும் இருள்மலத்தின் தன்மைகள் பற்றிக் கூறுவதால் இருள் மலநிலை எனக் கூறப்பட்டது ஆயினும் ஆணவத்தை நீக்குவதற்குக் கருவியாகிய மாயையின் தன்மைகளும், ஆணவமலத்தால் உண்டாகும் கன்மமலத்தின் தன்மைகளும் உடன் கூறப்படுகின்றன.

## ஆணவத்தோடு நிலையான பொருள்கள்.

தொன்றுதொட்டே இடைவிடாது வருகின்ற பிறவித் துன்பங்களும் பிறவித் துன்பங்களுக்குக் காரணமாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும், வீட்டின்பமும், வீட்டின்பத்தைத் தருகின்ற சிவமும் உள்பொருள்களாகும்.

உலகாயத சமயக் கோட்பாடுடையவர்கள் கடவுளும் முத்தியின்பமும் ஆன்மாவும் மலங்களும் இல்லாத பொருள்கள் என்று கூறுவர். அது எவ்வாற்றாலும் பொருந்தாது.

## ஆணவம் உண்டென்பதை அனுமானத்தால் அறிதல்

உலகிலுள்ள பலவேறுபட்ட பொருள்களின் வேறுபாடுகள் தோன்றாவண்ணம், அவை எல்லாவற்றையும் மறைத்து, இருளாகிய ஒரே ஒரு பொருள்போலத் தோன்றும் வண்ணஞ் செய்துநிற்கின்ற பொருள் இருளே ஆகும். இந்த உவமையினால் அறியப்படுவது, ஆன்மாக்கள் பிறவித்துன்பம் வீடுபேறு அவற்றின் காரணங்கள் என்பவற்றை அறிந்து உய்வடையா வண்ணம் அவற்றின் அறிவை மறைத்துநிற்கும் இருள்மயமாகிய பொருள் ஆணவமே என்பதாகும்.

## ஆணவம் இருளிற்கொடியது

இருளானது உலகிலுள்ள பொருள்களின் வேறுபாடு தோன்றா வண்ணம் மறைத்து நின்றாலும், தனது இருளாகிய வடிவத்தை

வெளிப்படையாகக் காட்டி நிற்கும். ஆனால் ஆணவமோ ஆன்மாக்களை மயங்கச்செய்து நிற்கும்போது, தான் மயங்கவைக்கும் பொருள்களையும் காட்டாது. தனது வடிவத்தையும் காட்டாது நிற்றலால் ஆணவம் இருளிலும் கொடியது என்பர்.

ஆன்மாக்களை மயக்கி நற்செயல்களைத் தீயசெயல்கள் என்றும், தீயசெயல்களை நற்செயல்கள் என்றும் திரிபுபெற உணரவைத்து, கெடும்வண்ணம் ஆன்மாக்களை வஞ்சிக்கும் ஆற்றல் ஆணவத்திற்கே உரியது.

## ஆணவம் அநாதியே ஆன்மாவுடன் சேர்ந்தது

பூமியிலே ஒளியும் இருளும் இருப்பது போல, ஆன்மாவுள் சிவ ஒளியும் ஆணவ இருளும் உள, ஆயினும் அநாதியே உயிருடன் கலந்து நிற்கும் ஆணவமல இருள் உயிருடன் உள்ஒளியாக உள்ள சிவத்துடன் சாராது, ஆன்மாவை மட்டும் பற்றிக்கொண்டு, இன்றுவரையும் இணைந்து நிற்கிறது.

இருளானது ஒருபொழுதும் ஒளியை அடக்காது அதனிடமுஞ் செல்லாது. அதுபோல இருளாகிய ஆணவமலம், சிவத்தை மறைக்கவோ அதனிடம் செல்லவோ மாட்டாது. ஆயின் சிவத்தின் உள்ளொளி பிரகாசிக்குமாயின், ஆணவ வலி அடங்கும் ,சிவமயமாகிய குருவருள் கிடைக்கும் வரை, ஆணவம் ஆன்மாவுடன் இருந்தே தீரும்

## ஆணவ மலத்தின் வலிமை

பல புருஷர்களுடன் சேர்ந்து வாழும் விபசாரப் பெண்ணானவள் அவர்களோடு கூடிவாழும் போது, அவர்களுக்குத் தனது வடிவத்தைக் காட்டியே வாழ்வாள். ஆயின் ஆணவ மலமாகிய பெண்ணோ எண்ணற்ற ஆன்மாக்களாகிய கணவர்களோடு சேர்ந்து இருந்தாலும், ஆன்மாக்களாகிய தமது கணர்வகளுக்குத் தனது வடிவத்தைக் காட்டாத இழிந்த தன்மையை உடையவளாம் எனவே ஆணவத்தை விட்டு நீங்குதலே ஆன்மாக்களுக்குரிய கடமையாகும்.

## ஆன்மாக்களுக்கு அறியாமையைத் தருவது ஆணவமே

ஆன்மாக்கள் பிறவியை அடையமுன் உடம்பு முதலிய கருவிகளின்றித் தனியாகக் கேவலாவஸ்தையில் கிடக்கும்போது அறிவு இருந்தும் ஆணவத்தின் மறைப்பினாற் செயலின்றிக் கிடக்கின்றன. இறைவன் கேவலாஅவஸ்தையில் இருக்கும் உயிர்களுக்கு உடம்பு முதலிய கருவிகளைக் கொடுத்து அவற்றின் அறிவினைத் தொழிற்படச் செய்கிறார்.

(தொடரும்...

★ இறைவன் முன் எல்லோரும் சமம். ★

உ

# அரை நிமிட நேரம்

சி. யோகேஸ்வரி

'மரணமே என்னை அணுகாதே'' என்றுதான் நாம் கேட்டுக்கொள்கிறோம். மரணம் அணுகாத பெருவாழ்வு பெற இறைவனை நாம் எல்லோருமே வேண்டுகின்றோமென்று கூறமுடியாது. மரணம் வரக்கூடாதென வேண்டும் நாம் மரணமில்லாது வாழ அந்த இறைவனது திருவடியில் ஐக்கியப்பட வேண்டுமென உணர்வதில்லை. அதற்காக அவனிடம் யாசித்து நிற்பதில்லை, அரை நிமிடமேனும் அவனது திருவடியைத் தியானிப்பதில்லை.

ஐயன் முருகனின் திருவடியில்ஒன்றித்துவிட்டால்போதுமே மரணம் எம்மை அணுகாது.

இந்த உடல் அழிவுறும் மரணம் வந்துற்றாலும் நாம் அந்தத் திருவடியில் ஐக்கியப்பட்டுவிட்டால் அது பேரானந்த நிலையல்லவா?

'' நான் பிரம்மமாயிருக்கின்றேன்'' என்னும் உணர்வுபெற்று இரண்டற்று ஒன்றாகி விடும் பேரின்ப நிலை அது.

எனவே மரணம் வருவதும் வராததும் பற்றிக் கவலைப்படாது அந்தப் பேரானந்தப் பெருவாழ்வைப் பெற்றிடவே நாம் வேண்டுதல் செய்ய வேண்டும், அதைப் பெற்றுவிட்டால் மீண்டும் பிறப்பு வராது.

மரணம் வேண்டாம் என்று கூறுவது போல '' பிறப்பு வேண்டாமென ''வேண்டுவோருமுளர், அவர்கள் பிறப்பினால் வரும் துன்பங்களை அறிந்தவர்கள், பிறவிப்பிணி பற்றி உணர்ந்தவர்கள்.

காரைக்காலம்மையார் கூட
'' பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும்'' என்று வேண்டினார்.

பிறந்தால் ஒரு நாள் மரணம் வரும், அதன் பின் பிறப்பு வரும். பிறவிப் பெருங்கடலில் அலையுண்டு தத்தளிக்க நேரும். எனவே பிறவாமலே இறைவனது திருவடியை அடைந்து விடுவது சிறந்ததாகும்.

செஞ்சுடர் வேலோனின் திருவடியைப் பற்றி தொழுது, பிறவியை அறுத்து, பரமுத்தி பெற அந்த வேலன்தான் அருள் தரவேண்டும். திருவடியைப் பற்றித் தொழுவதற்கு தமிழ் கற்க வேண்டும். அதுவும் சாதாரண மான தமிழ்அல்ல எமது தமிழ் இறைவனை அருள்தரச் செய்ய வல்லது, அதனால் சிறப்பாகத் திகழ்வது அந்தத் தமிழிலே பாடல்கள் பாடி, திருவடியைப் பற்றித் தொழவேண்டும். அதனால் பிறவியறுத்து பரமுத்தி யடைய முருகன் தான் அருள் நல்கவேண்டும்.

திருப்புகழைப் பாடப்பாட திருமுருகன் அருள் தருவானென்பது திண்ணம்.

திகழ் தமிழ் கற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடியைப் பற்றித் தொழுதுற்றுச்
செனன மறுக்கைக்குப் பரமுத்திக் கருள் தாராய். — திருப்புகழ்

# ஞானச்சுடர் சந்தாதாரர்களுக்கு
## அன்பான வேண்டுகோள்

மேற்படி 2002 ஆம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தைச் செலுத்தி எமது ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஆதரவை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

| காசுக்கட்டளை:- | காசோலை:- |
| --- | --- |
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம் | க. / இல. P. 7481 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி |
| | பருத்தித்துறை. |

**T. P. No. 021-2263406**

மேலும் ஆச்சிரமப் பணிகளுக்கு உதவி புரிய விரும்புவோர் மேலே குறிப்பிட்டவாறு தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வண்ணம் பேரவையினர்.

★ வெளிச்சத்தைப் பார், விளக்கைப் பார்க்காதே. ★

உ

# மயில்வாகனம் சுவாமிகளின்

# 18 ஆவது ஆண்டு

## குருபூசைத்தினப் போட்டி - 2003



சுவாமிகளின் குருபூசைத்தினம் 04 - 08 - 2003 கொண் டாடப்படவுள்ளது. குருபூசை தொடர்பாக மாணவர்கள் இடையே பேச்சுப்போட்டியும், பார்வைக்குறைபாடு உடைய மாணவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடியும் வழங்கப்பட உள்ளது.

## மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி

| பிரிவு 1 | பிரிவு 2 | பிரிவு 3 |
|---|---|---|
| தரம் 6 - 7 | தரம் 8 - 9 | தரம் 10 - 11 |

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் தரம், பாடசாலை, பிறந்த திகதி ஆகியவற்றை அதிபர் மூலம் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி 15-07-2003 திகதிக்கு முன்பு ஆச்சிரமத்திற்கு தபாலிலோ நேரிலோ கையளிக்கலாம்.

விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு வழமை போல போட்டி பற்றிய விபரங்கள் அனுப்பி வைக்கப்படும்.

★ நல்லொழுக்கம் சமய வாழ்வுக்கு நல்ல வழி. ★

# மாணவர்களுக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு

பார்வைக் குறைபாடு உடைய பாடசாலை மாணவர்கள் பார்வைக்குறைபாடு உண்டு என்பதை தாம் கல்வி கற்கும் பாட சாலை அதிபர் மூலம் உறுதிப்படுத்தி 15 - 07 - 2003 -ம் திகதிக்கு முன்பு ஆச்சிரமத்திற்கு தபாலிலோ நேரிலோ கையளிக்கலாம்.

இவர்களுக்கு விஷேட நிபுணர் மூலம் கண்பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு தேவையானவர்களுக்கு பெறுமதியான மூக்குக்கண் ணாடி இலவசமாக குருபூசைத்தினத்தன்று வழங்கப்படும்.

*** ***

# கற்கவேண்டிய பாடங்கள்

சூரபத்மன் சிவபெருமானிடம் வரம் பெற்று எல்லா அண்டங் களையும் ஆட்சி செய்யும் ஐஸ்வரியத்தைப் பெற்றிருந்தான். ஆனால் இறுதியில் தனக்கு இவ்வாறான வரம் வழங்கிய சிவபெருமானையே எதிர்ப்பதற்குத் துணிந்தமையால் மன்னிக்க முடியாத மிகவும் கீழான பாவத்தைச் செய்து இறுதியில் முருகப்பெருமானுடன் மோதி அழி வடைகின்ற நிலமை ஏற்பட்டது.

அதே போன்று தேவர்கள், தக்கன் கேடு செய்கின்றான் என்று தெரிந்தும், சிவபெருமானை அவமதிக்கின்றான் என்று தெரிந்தும் அந்தத் தக்கனுடன் சேர்ந்து யாகத்தில் பங்குபற்றி பாவமான செயல் புரிவதைப் பார்க்கின்றோம். இந்தத்தேவர்கள் தான் சூரபத்மனால் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு துன்பப்படுவதையும் பார்க்கின்றோம்

ஆகவே சூரபத்மனைப் போலல்லாமல் செய்நன்றியுடன் நாம் வாழ வேண்டியது அவசியம் என்பதுடன், தக்கனைப்போன்ற கேடு செய்கின்றவர்களுடன் சகவாசம் வைக்காது நல்லவர்களுடன் சேர்ந்து நல்லவற்றைச் செய்வதன் மூலம் வீண் துன்பங்களிலிருந்து விலகிக் கொள்ள முடியும் என்ற நல்ல பாடங்களையும் கந்தபுராணத்திலி ருந்து கற்றுக்கொள்ள முடிகின்றது.

வைகாசிப் பெருவிழாவில்
திரு. கு. சோமசுந்தரம் அவர்கள்

* பகைமையைப் பகைமையால் தணிக்க முடியாது. *

# ஆடி மாத வாராந்த நிகழ்வுகள்

04 - 07 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. க. கந்தசாமி (பேரவை உறுப்பினர்)

**சொற்பொழிவு : "வாலிவதை"**

வழங்குபவர் : செஞ்சொற் செம்மல் இரா. கேதீசன்

---

11 - 07 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

திருமதி சி. வைத்தியநாதசர்மா ஆசிரியையின் வழி நடத்தலின் பிரகாரம்

**வல்வை சிதம்பரக்கல்லூரி மாணவர்களான**

செல்வி ஞானச்சந்திரன் கேதீஸ்வரி பேச்சு

செல்வி இரத்தினசிங்கம் மணிமொழி பேச்சு

செல்வன் பஞ்சலிங்கம் தனுராஜ் பாட்டு

செல்வி பத்மநாதன் யோகாம்பிகை பண்ணிசை

செல்வன் கணேசதாஸ் விகர்ணன் பேச்சு

(இணுவில் மத்திய கல்லூரி)

**" மணிவாசகர் வழங்கும் வாசகம் "**

---

18 - 07 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : சீ. முருகவேள்
(கிராம உத்தியோகத்தர் இடைக்காடு)

சொற்பொழிவு : " வழி காட்டிய வாதவூர் வண்டு "

வழங்குபவர் : சித்தாந்த பண்டிதர் சி. வேலாயுதம்
(இளைப்பாறிய அதிபர்)

---

25 - 07 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# ஆடி - 2003

வெளியீட்டுரை : Dr. V. பாலகிருஸ்ணன்

மதிப்புரை : மதுரகவி காரை M. P. அருளானந்தம்

பதிவு இலக்கம்;- *Q. D. / 58 / NEWS / 2003*

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (2003 ஜனவரி- ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 2004 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும். அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு:
**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
செல்வச்சந்நிதி தொண்டைமானாறு